1044

வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ

(மாதப் பத்திரிகை.)

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
[illegible] ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
[illegible] ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
[illegible] பிரசுரம் செய்யப்படுவது
[illegible] 1937-ஹூ ஜூன்-மீ [ஆனி-மீ

விஷயம்.

1.	குறிப்புகள்	1—4
2.	ஸ்ரீமந்நாதமுனிகளும் ஸ்ரீதேசிகனும்	4—8
3.	ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி]	41—48
4.	கோதாஸ்துதி [தொடர்ச்சி]	75—90
5.	பூர்வநிர்வாஹ பரித்ராணமும் நம் அண்ணாவின் பதில் ஸம்ரம்பமும்	1—5

27 AUG 193…

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ||

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3 | ஈச்வர-ஹூ ஆனி-மீ | ஸஞ்சிகை 6

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிவ்யமுக்தஸ்வயம் |

ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேசார்யவைபவம் ||

குறிப்புகள்.

ஆனி மாஸம்—

இம்மாஸம் வரும் விசேஷதினங்களுக்குள் முக்கியமானது பெரியாழ்வாருடைய அவதாரதினம். (ஆனி-மீ 6வ) ஆழ்வார்களுள் பெரியவர் பெரியாழ்வார். பல்வேறு சமயத்தார்கள் குழுமியிருந்த பாண்டியன் அவைக்களத்தில் திருமாலின் பரத்துவத்தைஸ்தாபித்தவர் இவரே. திருமால் கருடவாகனனாய்த் தோன்ற அவரை வாழ்த்தி இவர்பாடிய பல்லாண்டு, வேதத்துக்குப் பிரணவம்போல் தமிழ் வேதத்துக்கோர் பிரணவமாய் அமைந்திருக்கிறது. ஸ்ரீ ஆண்டாளை தனக்குற்ற வொருமகளாகப் பெற்று அவளைத் திருமகளைப்போல் வளர்த்து.

குன்றுடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல் நிறமுடைய நெடுமாலுக்கு.

அவளை நாடுகரும் அறிய நல்லதோர் கண்ணாலம் செய்து கொடுத்த பெருமையுடையவர் இவரே, முன் இவர்.

ஆணைப்பார் இவன் நேரில்லைகாண் திருவோணத்தான்
உலகாளும் என்பார்களே.

என்று கூறியதை மெய்ப்பிக்கக் கருதியே பகவானும் ஸ்ரீ தேசிகனைப் திருவோணத்தில் அவதரித்து இன்று உலகினையாள்கிறாரோ னும்.

ஸ்ரீ:

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபை ஸ்ரீரங்கம். சென்னை கிளையின் ஆதரவில் ஸ்ரீ காஞ்சியில் நடந்த ஸதஸ்ஸின் விபரம்.

சென்ற மாஸத்திய ஸம்ரக்ஷிணிமலரில் குறிப்பிட்டிருந்த படி ஸ்ரீதேவாதிராஜன் ப்ரம்மோத்ஸவத்தில் இரண்டாம் திருத்தேர் மஹோத்ஸவ தினமான 29—5—37 சனிக்கிழமையன்று பகல் 3-மணிக்கு சின்னக்காஞ்சிபுரம் ஆனைகட்டித்தெருவில் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் திருமாளிகையான “ஹஸ்திகிரி”யில் நமது ஸபையின் சார்பாக ஒரு ஸதஸ்ஸூ கூடிற்று. ப்ரபலவித்வான்களும் ப்ரமுகர்களுமாகப் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ-உப-வே பண்டித பூஷணம் பகவத்விஷயம் மஹாமஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்மாசாரியஸ்வாமி ஸதஸ்ஸின் வேண்டுகோளுக் கிணங்கி அக்ராசனம் வஹித்தருளினார்.

முதலில் ஸ்ரீ-உ-வே கோடிகன்னிகாதானம் அய்யாக்ருஷ்ண ஸாமி தாதாசாரியஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் சில க்ஷோபங்கள் வந்துசேரவும், அவற்றைப் போக்கவேண்டி ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாயபரிசுத்தி முதலிய க்ரந்தங்களைச் செய்தருளிய மஹோபகாரத்தைப்பற்றி வெகு அழகாக எடுத்துப் பேசினார். பிறகு ஸ்ரீ-உப வித்வான் இளநகர் கட்டம் பட்டண்ணு ஸ்வாமி சரணாகதஸஸ்யங்களை (சரணமடைந்த உயிர்களென்னும் பயிர்களை) அபிவ்ருத்திசெய்யும் சரண்யனுடையசேதனஸம்ரக்ஷண லீலையை ஸ்ரீதேசிகன் அநுபவித்த ப்ரகாரத்தைப்பற்றிப் பேசினார்.

ஸ்ரீ-உ-வே பண்டிதராஜ திருவரங்கம் திருமலை தாதாசாரியஸ்வாமி, M. O. L. (ப்ரின்ஸிபால், ஸ்ரீவேங்கடேச்வரஸம்ஸ்க்ருத காலேஜ், திருப்பதி,) ஸம்ஸ்கிருதத்தில் வெகு சுருக்கமாய் ஸ்வாமி தேசிகன் ஒரே விஷயத்தை விஸ்தாரமாயும் ஸங்க்ரஹமாயும் ஸாதிக்கவல்ல ஸாமர்த்தியத்தைக் கொண்டாடினார்.

ஸ்ரீ-உ-வே. வித்வான் திருக்குடந்தை ஸூந்தராசாரியர் ஸ்வாமி ஆத்மோஜ்ஜீவனத்துக்கு ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளில்

189986

ஓரொன்றேயமையும் என்கிற விஷயத்தை நிரூபித்துப் பண்டித பாமரர்களெல்லோரும் உஜ்ஜீவிக்கும் வண்ணம் உபய பாஷைகளிலும் க்ரந்த நிர்மாணம் செய்தருளி வாழ்வித்தமையைப் புகழ்ந்து பேசினார்.

ஸ்ரீ-உ-வே. சிரோமணி, ப்ரசண்ட வித்வான் கூத்தப்பாக்கம் நீலமேகாசார்யஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாயம் ஒன்றுதான் லோகத்துக்கு ஹிதத்தைத்தரவல்லதென்றும், இந்த ஸம்ப்ரதாயத்துக்கு சிலரால் ஏற்படும் விபரீதங்களைக் கண்டிப்பது நமது கடமையென்றும் அழகாய் எடுத்துக்காட்டினார்.

பின்பு சிரோமணி தர்க்கார்ணவ பண்டிதரத்ந உத்தமூர் ஸ்ரீ-உ-வே. வீரராகவாசார்ஸ்வாமி நம் தேசிகன் திருவடிகளையணுகி அன்யர்கள் விஷயக்ரஹணம் செய்து, பிறகு அதைத் தாமே தமது வெளியீடாக ப்ரசாரம் செய்துவருகிறார்களென்றும், ஆகையால் அவர்களுக்கு சாஸ்திரார்த்தங்களைத் தெரிவிப்பது லோக சாஸ்திரங்களுக்கு ஆகாதென்றும், ப்ரதிபக்ஷிகளுக்கு அறிவிக்கவேண்டிய அவச்யமான அம்சங்களை தனிக்கடிதம் மூலம் தெரிவிக்காமல் “ஸம்ரக்ஷிணீ” மலர்களின் வழியாகவே அறிவிப்பதுதான் உசிதமாகுமென்றும் இல்லாவிடில் ப்ரதிபக்ஷிகள் தங்களுக்கு வந்த கடிதங்களில் எழுதப்பட்டிருக்கும் தங்களுக்கு வேண்டாத விஷயங்களையெல்லாம் மறைத்துவிட்டு வேண்டிய விஷயங்களை மட்டிலும் வெளியிட்டுக்கொள்ளுகிறார்களென்றும் கூறினார்.

அதற்குமேல் ஸ்ரீ-உ-வே. மதுராந்தகம் ந்யாய வேதாந்த சிரோமணி வித்வான் தி. வீரராகவாசாரியர் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீதத்வமுக்தாகலாபத்தில் நாயகரத்னங்கள் போன்ற சில ச்லோகங்களை உதாஹரித்து ஸ்ரீ தேசிகன் பெருமையை அருமையாக எடுத்துரைத்தார்.

ஸ்ரீ-உ-வே. மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ், ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்திராதிபர் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸூக்திகளின் பெருமை அளவிறந்ததென்றும். அவைகளைக்காலதத்வம் உள்ளளவும் ரஸாஸ்வாதம் செய்தாலும் செய்ய முடியாதென்றும் காட்டி அந்த க்ரந்தங்கள் விஷயமாய் ஏற்படும் தூஷணங்களைக் களைந்தெறிவது நமது கடமையாகுமென்பதை எடுத்துக்காட்டினார்.

ஸபையின் சென்னைக் கிளையினுடைய உபதலைவரான ஸ்ரீ-உப- பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி பேச்சையில் ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திகளுக்குக் களைபோலிருக்கும் தத் விரோதிகளின் வாதங்களைக் களைவது அவச்யமென்றும், நம் ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவரும் 'ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ' யென்னும் பத்திரிகை அக் கைங்கர்யத்தைச் செய்துவருவதோடு சென்னை வாஸிகளின் வேண்டுகோளின்படி ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரங்களுக்கு எளிய தமிழ் நடையில் உரையெழுதி வெளியிடுகிறதென்றும், இவ்வருஷம் முதல் ரஸமான சிறு வ்யாஸங்களையும் ஸம்ப்ரதாயத்துக்கு ஸம்பந்தமான குறிப்புகளையும் சேர்த்து பொதுஜனங்களுக்கு ஸம்ப்ரதாயத்தில் ஒரு குதூஹலத்தை உண்டாக்கியிருக்கிறதென்றும், சில ப்ரமுகர்கள் இதன் ஜீவித சந்தாதாரர்களாகச் சேர்ந்து ரூ 50 கொடுத்து உதவுகிறார்களென்றும், ஸ்மார்த்தர்களில் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான். வி. கிருஷ்ணஸாமி ஐயரைப்போல் நம் ஸம்ப்ரதாயத்திலும் ப்ரமுகர்கள் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி பாடசாலையை ஸ்தாபிக்க முன்வரவேணுமென்றும் இந்த ஸதஸ்ஸை நடத்திவைக்கும் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி இந்த விஷயத்தில் மார்க்கதரிசி (வழிகாட்டி) யென்றும் கூறினார்.

ஸ்ரீ-உப-வே. அக்கிராஸனாதிபதிஸ்வாமி தமது முடிவுரையில் அக் ஸபை மேன்மேலும் விருத்தியடைவதற்கு நம் ஸமூகத்தின் ஒற்றுமையே காரணமென்றும் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ரஸங்களை அனுபவிப்பதைக்காட்டிலும் புருஷார்த்தம் இவ்வுலகில் வேறில்லையென்றும் கூறி ஸ்ரீஸூக்தி ரஸங்களில் சிலவற்றை அழகாக அருளிச்செய்து முடித்தார்.

ஸ்ரீ-உப-வே. அட்வகேட் ஸ்ரீமான் தி. ராமஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி 'ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை' என்னும் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த பாசுரத்தைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் விவரித்து வந்தவர்களுக்கு வந்தனோபசாரம் செய்து முடித்தார்.

பெரும் பண்டிதர்கள் சேர்ந்த இச்சபையில் பண்டிதர்களின் உபந்யாஸங்களை விரிவாகச் சொல்லவும் கேட்கவும் வேண்டுமென்று பலர் விரும்பினார்கள். ஸ்ரீ தேவாதிராஜன் திருத்தேர் உத்ஸவத்தை உத்தேசித்து ஸபை இனிது கலைந்தது.

ஸ்ரீ:

ஸ்ரீமந்நாதமுனிகளும் ஸ்ரீதேசிகனும்

𑌨𑌾𑌥𑍇𑌨 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌤𑍇𑌨 𑌭𑌵𑍇𑌯𑌂 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑌹𑌮𑍍 ।
𑌯𑌸𑍍𑌯 𑌨𑍈𑌗𑌮𑌿𑌕𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑌲𑌕𑌤𑌾𑌂 𑌗𑌤𑌮𑍍 ॥

ஞானப்பெருந்தகவோராகிய நமது ஆசார்யர்கள் தெளியாத மறைநிலங்களைத் தெளிந்து, திருமால் உகந்தேற்கும் சாமோபாயமான சரணாகதியால் 'பண்டைவல்வினை பாற்றியருளினான்' என்றபடி நமது பிறவித்துயரைமாற்றி, ஓர் குலதனமாக நமக்குத் தந்தருளியிருக்கும் ஒப்புயர்வற்ற நமது ஸம்ப்ரதாயத்தை

'[illegible]'

என்றபடி அனுபவிப்பதற்கு மிகவும் இனிமையான நிழலைத் தந்துதவும் ஓர் கற்பகவ்ருக்ஷம் என்னலாம்.

இந்த ஸம்ப்ரதாய கற்பகத்தருவுக்கு * வித்திட்டவர் ஸ்ரீமந்நாதமுனிகளாவார். இத்தைக் கணிசித்தே ஸ்வாமி தேசிகன்

𑌨𑌾𑌥𑍋𑌪𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍁𑌪𑌚𑌿𑌤𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑍇-
𑌯𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍈𑌃 । 𑌤𑍍𑌰𑌾𑌤𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌰𑌿𑌦𑌮𑌖𑌿𑌲-
𑌤𑌮𑌃𑌕𑌰𑍍𑌶𑌨𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑌃 ॥

என்று கொண்டாடுகிறார். இந்தக் கற்பகத்தருவை வந்தாருழ்ந்த புறச்சமயங்களாகிய களைகளை 'காணிகீர்த்தி இராமாநுசமுனிவர்' அறவே களைந்தெறியவும், இதற்கு சிரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் பாரொன்றச்சொன்ன தமது பழமொழிகளால் "நீர்வார்த்து வளர்க்கவும் இது செழித்து வளர்ந்து இன்று பல்லாயிரவரைத்தன்று நறுந்தேன் இடைதுளிக்கும் நிழலிருக்கையில்" ஏற்று அளிக்கின்றது.

இம்மதம் வேதங்களில் கூறப்பட்டிருப்பதுதான். ஆயினும் 'உபநிஷதடவீஷு' என்றபடி வேதங்கள் காடுகள்போல் யாவருக்கும் செல்லவொண்ணாத தன்மையுள்ளவையாக இருப்ப

---

* வித்து முன்னமேயே இருப்பதாயினும் அது விளைந்தபின்னரே முளைத்து வளர்ந்து தழைக்கும். அதுபோல் நமது ஸம்ப்ரதாயம் ஸநாதனமாயிருந்தாலும் இதற்குப் புத்துயிரளித்தவர் ஸ்ரீமந்நாதமுனிகள் என்பது கருத்து.

தால் அவற்றிற்குள் வழியறிந்து செல்லும் யோக்யதையுள்ளவர்கள் மிகச்சிலரே. வ்யாஸருடைய ஸூத்ரங்கள் மிகச் சுருக்கமாதலாலும் இவற்றிற்குப் போதாயன மஹரிஷியருளிய விருத்தியுரை லுப்தமாகிவிட்டதாலும் அவற்றால் நமக்குப் பயன் யாதுமில்லாமற்போயிற்று.

இதையே வகுளாபரணப் பெருமாள் தமது செவிக்கினிய செஞ்சொல்லால் எடுத்தியம்பியிருப்பினும் 'ஸாரஸாரஸ்வதாநாம் ஶ்ரீவைஷ்ணவாநாம்பிரிதிஃ' என்று வையகத்தோர் புகழும் இவர் ப்ரபந்தங்கள் ஓதுவாரின்றியும், பண்ணுலகில் படியாத இசையால் பாடுவாரின்றியும் மறைந்துவிட்டன. காலக்ரமத்தில் ஆழ்வார் பெருமையும் கொண்டாடுவாரின்றி மறையலாயிற்று.

ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் சற்றே மறைய நேர்ந்ததற்குப்பின்னுமோர் காரணமுமுண்டு. பண்டைத்தமிழர் மதம் வைணவமாயினும் ஆழ்வார்காலத்துக்குப் பின்னிட்டவர்கள் மதம் முழு வைணவமென்றுரைக்க வியலாது. பாமர மக்கள் பலர் வைணவராயிருப்பினும் அரசர்களிற்பலர் வைணவத்தைத் துவேஷித்துச் சைவத்தையே கௌரவித்ததால் இவர்களால்ஆதரிக்கப் பெற்ற புலவர்கள் பலரும் சைவர்களேயாம். ஆழ்வாருக்கு 'வேதந் தமிழ் செய்த மாறன்' முதலிய பிருதுகளைக் கூறுவதற்கும் அநுமதி தராது பூசல் புரிவாராயினர். இக்காலத்தில்தான் "கண்ணன் கழலிணை" என்னுந் திருவாய்மொழிப் பாசுரம் எழுதிய ஓலைச்சுருள் வைக்கப்பெற்ற சங்கப்பலகை தன் மீதிருந்த புலவர் அனைவரையும் கீழே தள்ளிவிட்டு இச்சுருளை மாத்திரம் சுமந்து நின்றதென்பர்.

பல கூறி என்ன பயன்? திருவுறையுந்திருமால் திருமார்பினுக்கும் அழகினைச் செய்கின்ற கௌஸ்துபத்தைக் கல்லும் மண்ணும் நிறைந்த குலவரையினேடு ஒப்பு நோக்குபவராகிய புல்லறிஞர் மிகுந்திருந்த அக்காலத்தில் திருவாய்மொழியின் பெருமை எங்ஙனம் உணரப்பெறும்? வெள்ளிடை மலைபோல் யாவரும் அறியக்கிடக்கும் ஸ்ரீதேசிகனுடைய பெருமைக்கும் இழுக்குரைக்கும் புல்லறிஞர் ஒரு சிலர் இக்கண்ணகன் ஞாலத்தில் உலவி வருதலை இக்காலத்திலும் நாம் கண்கூடாகக் காணுதலால் காலத்தையுங் குறை கூறுதலிற் பயனில்லை.

நிற்க இவ்வாறு மறைந்துவிட்ட திருவாய்மொழியை உபதேச புரஸ்ஸரமாகப் பெற்று, பரமக்ருபையாலே 'தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல்' என்று கொண்டாடும்படியாக இதைப் ப்ரவர்த்திப்பித்த ஸ்ரீமந் நாதமுனிகள் வீரநாராயணபுரத்தில் ஓர் ஆனி அநுராதத்தில் வந்தவதரித்தார். காலக்ரமத்தாலேயன்றி தாம் செய்தருளிய விசேஷ உபகாரங்களாலேயும் ஆதியாசார்யன் ஆகிய இவரை கஜவக்த்ரன் என்னும் நித்யஸூரியின் அவதாரம் என்பர் மேலோர். இவரது குலத்தின் பெருமை இவருடைய திருப்பேரனாகிய ஆளவந்தாருடைய 'ஜநித்வாஹம் வம்ஶே மஹதி ஜகதி க்யாதயஶஸாம் ஶுசீநாம் யுக்தாநாம் குணபுருஷதத்த்வஸ்திதிவிதாம்' என்கிற திவ்யஸூக்தியாலே அறியக்கிடக்கிறது. இவர் பக்தியோகநிஷ்டராய், உண்ணுநாள் பசியாவதொன்றில்லையோவாதேநமோநாரணவென்றெண்ணுநாளுமிருக்கெசுச்சாமவேதநாண்மலர்கொண்டுனபாதம் நண்ணுநாளவைதத்துறுமாகிலன்றெனக்கவைபட்டினிநாளே" என்று பகவத்தியானம் மேலிட்டு இருக்கும் நாளில் தண்குடந்தைக்கிடந்த மாலின்மேல் சடகோபன் பாடிய

ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே
நீராயலைந்து கரைய வுருக்குகின்ற நெடுமாலே!
சீரார்செந் நெற்கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலந் திகழக்கிடந்தாய்! கண்டேனெம்மானே.

என்னும் பாசுரத்தை சிலவைணவர்கள் அநுஸந்திக்கக்கேட்டார். "இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன்" என்று ஈடுபடச்செய்யுமதொன்றன்றோ நம் ஆழ்வார் பாசுரம். பாசுரத்தின் இனிமையும் பின்னிட்டோர் அதிர்ஷ்ட வசமும் ஒருங்கே சேர்ந்ததன் பயனாய் நாதமுனிகள் பரவசமானார். திருவாய்மொழிப் பாசுரங்கள் ஆயிரத்தையும் உலகினுக்களித்து உலகத்தோரை உஜ்ஜீவிப்பிக்க நிச்சயித்தார். 12000 ஆவ்ருத்தி கண்ணிநுண் சிறுத்தாம்பை யநுஸந்தித்து யோகதசையில் ஆழ்வாரைப் பிரத்தியக்ஷீகரித்து அவரிடம் திவ்யப்பிரபந்தங்களையும் மற்றுமுள்ள ரஹஸ்யார்த்தங்களையும் உபதேச புரஸ்ஸரமாகப் பெற்றார்! முயற்சி திருவினையாக்கும், என்னுந் தென்மொழியைப் பொன்மொழியாக்கினர்.

இவ்வாசார்யவர்யர் உலகினுக்குச் செய்தருளிய உபகாரங்கள் பலவாகும். அவற்றை ஆசார்யபரம்பரையை ஸேவித்து அறிந்துகொள்ளலாம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்"........பூமிதனில்
யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மைவெறும்புகழ்ச்சியில்லை,

என்று புகழப்படும் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் தமது ராமாயணத்தை அரங்கேற்றியது இவர் திருமுன்பேயாகும். ஸ்ரீரங்கத்தில் மேட்டழகியசிங்கர் திருவடிவாரத்தில் ஸ்ரீரங்கநாய்ச்சியார் தம்முடைய அருள்நிறைந்த கண்ணோக்கால் கடாக்ஷித்து ஆனந்திக்கவும், ஸ்ரீமந் நாதமுனிகள் கேட்டுவிக்கவும் கம்பர் தமது ராமாயணத்தைத் தாமே பிரஸங்கித்த காக்ஷி யுள்ளந்தோறும் உவகையை யூட்டுகின்றது. '𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌾𑌖𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌂' என்கிறபடி தமது ஆசார்யனாகிய நம்மாழ்வார் விஷயமாக சடகோபரந்தாதி என்னும் ப்ரபந்தத்தைக் கம்பரைக்கொண்டு செய்வித்தவர் ஸ்ரீமந் நாதமுனிகளே என்பர்.

ஸ்ரீரங்கம் ஓர் வண்டினம் முரலுஞ்சோலையாம். வண்டினமாவது நமது ஆசார்யர்களின் கூட்டம். ஸ்ரீரங்கநாதனைப் பாடி மகிழாத ஆழ்வார்களில்லை. அவரிடம் ஈடுபடாத ஆசார்யர்களில்லை. இந்த எம்பெருமான் விஷயமாக ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த

ஆராதவருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோன் அயோத்திமன்னர்க்களித்தகோயில்
தோராத தனிவீரன் தொழுதகோயில்
துணையான வீடணற்குத் துணையாங்கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங்கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்தகோயில்
தீராதவினையனைத்துந் தீர்க்குங்கோயில்
திருவரங்கமெனத் திகழுங்கோயில்தானே.

என்கிற இப்பாசுரத்தைப் பாடி மகிழாதார் யாருளர்? ஆராதவமுதத்தில் ஈடுபட்டார் ஸ்ரீமந் நாதமுனிகள். இவ்வாராத அமுதத்தையும் கடைந்தெடுத்த அருளமுதத்தைப் பரிமாறுகிறார் ஸ்வாமி தேசிகன். "வம்மின் புலவீர்!" ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவுள்ளத்து உகப்புக்குக் காரணமான இவ்வாசார்ய ரத்னம் அளிக்கும் அமுதவிருந்தைக் கூடிப்பருகிக் களித்து விளையாடுவோம். இவரைத்

தொண்டருக்குத் துணையடிவாழி நின்றுமுறுவல்
கொண்டமுகம் வாழி வாழிவியாக்கியா முத்திரைக்கை
வண்டிருநாமமும்வாழி மணிவடமுப்புரிநூல்
கொண்ட சீர்தூப்புல் குலமணியேவாழி நின்வடிவே.

என்று வாயார வாழ்த்தி வணங்குவோம்.

காளம் வலம்புரியென்ன நற்காதலடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல்
மூளுந் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளுந் தொழுதெழுவோம் நமக்கார்நிகர் நானிலத்தே

என்று மகிழ்வோம்.

இந்த நியமம் ஹம்ஸஸந்தேசாதிகாவ்யங்களில் காப்பாற்றப்படுகிறது. இந்தக் காவ்யத்திலுமப்படியே. நடராஜருடைய ஸந்த்யா நர்த்தனத்தை ஸ்வாமி வர்ணித்திருப்பதுபோல் வேறெங்கும் பார்க்கமுடியாது. 'தக்ஷிணாமூர்த்தியின் ரம்யதையில் ரஸமுள்ளதே; ஆனால் அந்த ரம்யதைக்கும் மூலமொன்றுண்டு' என்று ஹயக்ரீவஸ்தோத்ரம். நடராஜர் நர்த்தனம் செய்த ச்ரமத்தை வடவ்ருக்ஷமூலத்தில் ரம்யமான தக்ஷிணாமூர்த்தியாக இளைப்பாறிப் போக்கிக்கொள்ளுகிறார், உலகத்தின் ஸம்ஸாரச்ரமத்தையும் சமனம் செய்கிறார் என்று நிரூபணம். (11)

𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌗𑍁𑌣𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌰𑌾𑌮𑍇 𑌨𑌿𑌰𑌾𑌗𑌸𑌿 𑌵𑌾𑌗𑌸𑌿
𑌸𑍍𑌫𑍁𑌰𑌣𑌮𑍁𑌷𑌿𑌤𑌾𑌲𑍋𑌕𑌾 𑌲𑍋𑌕𑌾 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌦𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 ।
𑌵𑌰𑌤𑌨𑍁𑌹𑌤𑌿𑌂 𑌵𑌾𑌲𑌿𑌦𑍍𑌰𑍋𑌹𑌂 𑌮𑌨𑌾𑌕𑌪𑌸𑌰𑍍𑌪𑌣𑌂
𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌗𑍁𑌣𑍇 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌾𑌵𑌦𑍍𑌯𑍇 𑌮𑍁𑌧𑌾 𑌕𑌿𑌮𑍁𑌦𑌾𑌸𑌤𑍇 ॥

நிரவதிகுணக்ராமே ராமே நிராகஸி வாகஸி
ஸ்புரணமுஷிதாலோகா லோகா வதந்தி ஸதந்திகே ।
வரதநுஹதிம் வாலித்ரோஹம் மநாகபஸர்ப்பணம்
பரிமிதகுணே ஸ்பஷ்டாவத்யே முதா கிமுதாஸதே ॥

(ப-ரை) 𑌨𑌿𑌰𑌾𑌗𑌸𑌿 [நிராகஸி] - தோஷமற்றவரும், 𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌗𑍁𑌣𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 [நிரவதிகுணக்ராமே] - எண்ணற்ற குணங்களுக்கிருப்பிடமானவருமான, 𑌰𑌾𑌮𑍇 [ராமே] - (எல்லோரையும் ஆநந்திக்கும்) ராமன் விஷயத்தில், 𑌸𑌦𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 [ஸதந்திகே] - பெரியோரானஸத்துக்கள்காதுகேட்க, 𑌵𑌾𑌗𑌸𑌿𑌸𑍍𑌫𑍁𑌰𑌣𑌮𑍁𑌷𑌿𑌤𑌾𑌲𑍋𑌕𑌾𑌃 [வாகஸிஸ்புரணமுஷிதாலோகா:] - நாக்கென்னும் கத்தியை அசக்குவதால் (வீசுவதால்) இருட்டடைந்த புத்தியையுடைய, 𑌲𑍋𑌕𑌾𑌃 [லோகா:] - ஜனங்கள், 𑌵𑌰𑌤𑌨𑍁𑌹𑌤𑌿𑌂 [வரதநுஹதிம்] - ஸ்திரீயை (தாடகையை)க் கொன்றதையும், 𑌵𑌾𑌲𑌿𑌦𑍍𑌰𑍋𑌹𑌂 [வாலித்ரோஹம்] - வாலிவதத்தையும், 𑌮𑌨𑌾𑌕𑌪𑌸𑌰𑍍𑌪𑌣𑌂 [மநாகபஸர்ப்பணம்] - (காயுத்தத்தில்) கொஞ்சம் விலகினதையும், 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 [வதந்தி] - பேசுகிறார்கள். 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌾𑌵𑌦𑍍𑌯𑍇 [ஸ்பஷ்டாவத்யே] - ஸ்பஷ்டமான குற்றங்களையுடைய, 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌗𑍁𑌣𑍇 [பரிமிதகுணே] - ஸ்வல்ப குணமுடையவன் விஷயத்தில், 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 [கிமிதி] - என்ன காரணத்தினால், 𑌮𑍁𑌧𑌾 [முதா] - வீணே, 𑌉𑌦𑌾𑌸𑌤𑍇 [உதாஸதே] - வாயை மூடிக் கொள்ளுகிறார்களா?

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸுஜனஸார்வபௌமரான ராமனை நிர்தோஷகல்யாணகுணாகரனென்று இப்பத்ததி முடிவில் பாடுவதற்காக, ராமன் கதையாகிய ராமாயணத்தைக் கேட்டும், ராமனைத் தூஷிக்கும் துர்ஜனருடைய தௌர்ஜந்யத்தையும், அசட்டுத்தனத்தையும் காட்டுகிறார். ராமாயணம் கேட்கப் பாக்யம்பெற்றும், ராமன் திருவடிகளில் விச்வாஸம் வைத்து ஒருதரம் அடைக்கலம் புகுந்து எளிதில் பேரின்பம் பெறும் பாக்யத்தை இழப்பதுமன்னியில், ராமனையே தூஷித்து வீணே பாபச்சுமையை ஸம்பாதிப்பதெத்தனை அநிபுணமென்று காட்டி இப்பத்தியை முடிக்கிறார். சத்ருக்களாலும் 'வடிவெடுத்த தர்மம்' 'விக்ரஹவான் தர்ம:' என்றும், 'ப்ரக்யாதவீர்யரான சத்ரு' என்றும் புகழப்பட்டவரைத் தூஷிக்கிறார்கள். ஸமானகாலத்து சத்ருக்கள் புகழ்கிறார்கள். இப்பொழுது இவர்கள் இகழ்கிறார்கள். ஸாமாந்யரையும் தூஷிக்கலாகாது. புருஷோத்தமனாகிய ராமனைத் தூஷிப்பவருக்கு நற்கதி கூடுமோ. அபிஜாதபுருஷருக்கு அடையாளம் 'அநபிபவகர்த்தா: பரகதா:' என்றார் பர்த்ருஹரி. பரரை (பிறரை)ப் பற்றிப்பேசுவதில் இகழ்ச்சிலேசமுமிருக்கலாகாது; உத்தமபுருஷனான 'பரன்'விஷயத்திலேயே இம்மஹாபுருஷர் களிப்படிப் பேசுகிறார்களே. 'ராமனிலும் ராவணனே சிறந்தவன்' என்று ப்ரபலமாகக் கக்ஷி சொல்லி புத்தகங்களெழுதப்பட்டுள. வேடிக்கையாய் குழந்தைகள் செய்த தர்க்கத்தில் ஓர் நாடகத்தில் லவன் பேசின மூன்று தூஷணங்களை இங்கே குறிக்கிறார். அதில் தாடகையைக் கொன்றது ஒன்று. அவள்பிள்ளை 'மாரீசன்'. அவன் ராவணனிடத்தில் 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' என்று புகழ்ந்தான். தன் தாயைக் கொன்றது அதர்மமென்று அவன் தூஷிக்கவில்லை. ஆண்பிசாசைத்தானோட்டலாம், பெண் பிசாசை ஓட்டினால் பெண்பாவம் என்பரோ. 'வரதநு' என்று ஸ்த்ரீக்குப் பெயர். 'அழகான வடிவையுடையவள்' என்றும் பொருள். தாடகையின் கோரரூபமும், மனுஷ்யர்களைக் கொன்று தின்னும் புருஷாதியான சீலமும் ப்ரஸித்தம். 'வரதநு' என்பது விபரீதப் பெயரென்பது ரஸம். தன் தாயைக் கொன்ற ராமனை மாரீசன் தர்மமூர்த்தி என்று புகழ்ந்தான். இதைத் தூஷணமாகச் சொல்லுவது எப்படிப் பொருந்தும்? வாலிவதத்தைத் தோஷமென்று தூஷிப்பதும் வீணே. ஸீதையை ராவணன் அப

ஹரித்ததையும், ராமன் கதறி சோகஸாகரத்தில் மூழ்கியிருந்ததையும் வாலி அறிந்தவனே. சத்ரு இருக்குமிடம் தெரியாமல் ராமன் கஷ்டப்படுகிறார். 'ஒரு நாட்பொழுதில் உம்மிடம் மைதிலியைக் கொண்டுவந்திருப்பேனே; ராவணனைக் கொல்லாமல் கழுத்தில் கட்டி உம்மிடம் கொண்டுவந்து கொடுத்திருப்பேனே' என்று பின்னால் பேசினான். ஈஷத்தேனும் கிஞ்சித்காரம் செய்யத்தோன்றவில்லை. சரணாகதரக்ஷணத்திற்கும் கனிஷ்டப்ராதாக்களை லாலனம் செய்யவும் அவதாரம். வாலி இதற்கெல்லாம் நேர் விரோதி. ராமனுக்கு முக்ய தர்மம் ஆந்ருசம்ஸ்யம்; வாலியின் சீலம் ந்ருசம்ஸதை சரணாகதனான தம்பியைக் கடுமையாய் ஹிம்ஸிப்பவன். தண்டகாரண்யத்தில் ருஷிகள் ஹிம்ஸிக்கப்பட்ட விஷயத்தில் வாலியின் பலத்தால் என்ன ப்ரயோஜனமிருந்தது? லோகத்ரயகண்டகனான ராவணனிடமிருந்து வாலி லோகத்தை ரக்ஷிக்க முயன்றானா? எதிரில் யார் அவனோடு யுத்தம் செய்தாலும் அவர்பலத்தில் பாதி அவனுக்குச் சென்று விடுமென்று வரம் வாங்கினான். அந்த சக்தி 'அத்ருஷ்டசக்தி; த்ருஷ்டமான இவன் சக்தியில்லை. எதிரியின் பாதி சக்தி குறைந்து போவதும் எதிரியின் வீர்யக்குறைவன்று. 'எதிரி யுத்தத்தில் குறைந்தான். இந்த்ரபுத்ரன் விருத்தியடைந்தான்' என்று துந்துபி யுத்தத்திலும் ஸுக்ரீவயுத்தத்திலும் காண்கிறோம். அது வரத்தின் அத்ருஷ்டமஹிமை. இப்படி வரம்பெற்றவன் தன்னுடைய எதிரி எதிர் நின்று த்ருஷ்டமாய் யுத்தம் செய்யவேண்டுமென்று வீரவ்ரதமுறையை அபேக்ஷிக்க ந்யாயமில்லை. எதிரியின் பலத்தில் பாதியை வரமஹிமையால் பிடுங்கிக்கொண்டு உண்மையில் தன்னிலும் பலிஷ்டனோடு செய்யும் யுத்தம் தர்மயுத்தமாகாது. ப்ரஹ்மா கொடுத்த வரத்தைப் பொய்யாக்குவது உசிதமன்று. ஏன் ஸந்த்யையில் ந்ருஸிம்ஹன் ஹிரண்யனோடு போர் புரிந்தார், பகலில் யுத்தம் செய்யக்கூடாதா? அவர் வீரனாவரோ என்று கேட்கலாமோ? உலகத்திற்கு ராமவாலிகளின் பலதாரதம்யத்தையும் அவர்கள் பாணங்களின் சக்திதாரதம்யத்தையும் தெரியச் செய்ய பரோக்ஷத்தில் ஸுக்ரீவன் செய்த இரண்டு பரீக்ஷைகளாலே ராமன் பலமதிகம் என்று மூதலிக்கப்பட்டது. வாலி பெற்ற வரத்தை உத்தேசித்து பரோக்ஷத்தில்தான் பரீக்ஷிக்கலாம். தாத்பர்யசந்த்ரிகையில் ஸப்தஸாலங்களை நிஷ்பத்ரீகரணம் பண்ணின

வ்ருத்தாந்தத்தை அழகாக நிரூபித்துளது. ஸுக்ரீவனுக்கு ஸந்தேஹம் தெளிந்தும் நாம் ஸந்தேஹப்படலாமோ? ராமனுடைய ஸமாதானங்களை வாலி முழுவதுமேற்றுக்கொண்டு, தான் தூஷித்தது தப்பென்று நன்றாய் மனந்தெளிந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். 'ந தோஷம் ராகவே தத்யௌ தர்மேऽதிகதநிச்சய:' 'தர்மத்தில் நிச்சயத்தை அறிந்து ராகவனிடம் தோஷத்தை எண்ணவில்லை'. உன் ஹ்ருதயத்திலும் (ஸர்வபூதங்கள் ஹ்ருதயத்திலும்) உள்ள அந்தராத்மா தர்மாதர்மங்களை அறிவார், உன் அந்தராத்மாவை நீ ஸாக்ஷியாகக் கேள் என்றார். அவன் அப்படியே தன் ஹ்ருதயத்தையே சோதித்துக்கொண்டு த்ருப்தி அடைந்தான். அவன் குற்றம் அவனுக்குத் தெரியுமா, நமக்குத் தெரியுமா. 'தாரை தடுத்தும் உம்மிடம் பதம் பெற விரும்பியே நான் தம்பியோடு சண்டைக்கு வந்தேன்' என்றான் வாலி முடிவில். 'மனுஷ்யரூபமாய் தேவர்கள் பூதலத்தில் ஸஞ்சரிக்கிறார்கள்' என்று பெருமாள் அவனுக்குத் தாம் தேவன் என்பதை வ்யஞ்ஜனம் செய்தார். இந்த்ரபுத்ரனான அர்ஜுனன் விச்வரூப அத்யாயத்தில் 'உன் மஹிமையை அறியாத (அஜாநதா) என்னாலே உம்மைச் செய்த அவமதிப்பையெல்லாம் மன்னித்தருள வேண்டும்' என்று ப்ரஸாதனம் செய்தான். இந்த்ரபுத்ரனாகிய வாலியும் 'அறியாத என்னாலே (அஜாநதா மயா) நீர் தூஷிக்கப்பட்ட இக்குற்றத்தை ப்ரபுவே நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதை ஒப்பி க்ஷமித்தருளவேண்டும்' என்றான். வாலி ஒப்புக்கொண்டும் நாம் ஒப்புக்கொள்ளவில்லையென்பது உசிதமோ? விபீஷணனுக்கு 'அபயமளித்தேன் பயத்தை விடு' என்றார். அர்ஜுனன் சோகத்தாலும் மோஹத்தாலும் பீடிக்கப்பட்டு சரணம் புகுந்தான். 'சோகப்படாதே' என்றார் சரமச்லோகத்தில். 'நஷ்டோ மோஹ:' (மோஹம் போயிற்று) என்றான் அர்ஜுனன் முடிவில் அதைக்கேட்டு. வாலிக்கு அநுக்ரஹித்த சரமச்லோகங்களில், 'த்யஜ சோகம் ச மோஹம் ச பயம் ச ஹ்ருதயஸ்திதம்' என்று 'ஹ்ருதயத்திலுள்ள சோகம்மோஹம்பயம் எல்லாவற்றையும்விடு' என்று அருள்புரிந்து அபயமளித்து, 'கத: ஸ்வாம் ப்ரக்ருதிம் தர்ம்யாம்' என்றும் அவனுக்கு ஸ்வஸ்வரூபாவிர்பாவத்தைத் தந்த அழகைக் கவனிக்கவேணும். கரயுத்தத்தில் 'கான்பாணங்களால் துளைபட்டு ரக்தவிச்சு துர்கந்தம் வீச மத்தனாக மேலே விழவருகையில் வில்லை

வளைத்து பாணத்தைத் தொடுக்க, இரண்டுமூன்றடி ஒதுங்கினார், பின்வாங்கவில்லை. 'அபாஸர்ப்பத் த்வித்ரிபதம்' என்றார்ருஷி. இங்கே 'மனாக்' என்பதற்கு 'ஈஷத்து' என்று பொருள். ருஷியே மிகக் கொஞ்சமென்பதைக் காட்ட இரண்டுமூன்று என்றார். ராமாயணம் வாசித்து இவன் தூஷிக்கிறானா என்பதைக் கேட்க அங்குள்ள 'அபாஸர்ப்பண' பதத்தையே ப்ரயோகிக்கிறார். மத்யகந்தமும் ரத்தவீச்சும் துர்வாஸனையல்லவோ. திடீரென்று துர்கந்தம் வீசும்போது ஓர் ராஜபுத்ரர் சற்று ஒதுங்காரா? ரக்தத்தோடு மேலே விழவந்தால் சற்று ஒதுங்கலாகாதா? இதுவும் நரஸிம்மாவதாரமா! மனுஷ்யாவதாரம் மட்டும்தானே. ராமாயணம் படித்தவன் இப்படி தூஷிப்பனோ? கூட இருந்து பார்த்துப் புடவையுடுத்தி ராமபாணத்திற்குத் தப்பித்து ஓடின அகம்பனன் ராவணனிடம் கரயுத்தத்தை வர்ணித்ததைப் பார்த்தும் தூஷிப்பரோ? மூன்று தூஷணங்களுமப்படியே.

தர்மமான ஆசாரத்தை வ்ரதமாகக் கொள்ளுவதை 'அஸிதாராவ்ரதம்' 'கத்திமுனை வ்ரதம்' என்பர். பிறரைப் பழியாத நாக்கு 'அஸிதாராவ்ரதம்' இருப்பதாகச் சொல்லலாம். இங்கே பரமபுருஷனைப் பழிக்கும் நாக்கை 'வாகஸி' 'கத்திவாக்கு' என்றார். 'வாக்ஸாயகம்' 'வாக் சல்யம்' வாக் கண்டகம்' என்று விதுரப்ரஜாகரத்தில் காண்கிறோம். இங்கே 'வாக்கு கத்தி' என்பதற்கு வாக்கால் வெட்டுவதை விடு, கத்தியால் வெட்டுவது தயையாகும் என்றோர் அழகு. பிறரைத் தூஷிப்பது தன் நாக்கையே கத்தியால் அறுக்குமென்றும் ஸூசனம். பாணங்களைக் கண்ணன் பேரில் எரிந்து அசக்யமென்றோய்ந்து சொல்லம்புகளை எரிய ஆரம்பித்தான்' என்றார் மஹாகவி. வாக்கென்னும் கருங்கத்தியின் கருப்பு ப்ரபை புத்திக்குள்கூட உண்டாகும் என்கிறார். ராமன் காட்டுக்குப் போனதும் 'லோகமெல்லாம் இருண்டது, நிராலோகமாயிற்று' என்றார் பாதுகையில். ராமனை இப்படி தூஷிக்கவே லோகத்தில் ஆலோகம் களவு போய்விடுமென்கிறார்.

முதலாவது அநிபுணபத்ததி முற்றிற்று.

இரண்டாவது த்ருப்தபத்ததி (கர்விஷ்ட பத்ததி.)

த஦ெவ ஗ൃஹ்யதாம் நாம ஶாகமண்டூகராஸபை: ।
த்ரயாணாம் தாவதா ஹந்த மூர்த்தீநாம் கிமிஹாகதம் ॥

ததேவ க்ருஹ்யதாம் நாம சாகமண்டூகராஸபை: ।
திஸ்ருணும் தாவதா ஹந்த மூர்த்தீனும் கிமிஹாகதம் ॥ (1)

(ப-ரை) ஶாகமண்டூகராஸபை: [சாகமண்டூகராஸபை:] - ஆடு, தப்பளை, கழுதை இம்மூன்றாலும், த஦ெவ நாம [ததேவ நாம]- அவர்கள் பெயரே,(த்ரிமூர்த்திகளின் பெயரே) ஗ൃஹ்யதாம் [க்ருஹ்யதாம்] - வைத்துக்கொள்ளப்படட்டும். ஹந்த [ஹந்த]- நல்லது. தாவதா [தாவதா] - அதனால், த்ரயாணாம் [திஸ்ருணும்] - இம்மூன்றுக்கும், இஹ [இஹ] - இங்கே, கிமாகதம் [கிமாகதம்] - என்ன (உயர்த்தி வந்துவிட்டது), தாவதா [தாவதா] - அதனால், த்ரயாணாம் மூர்த்தீநாம் [திஸ்ருணும் மூர்த்தீனும்]- த்ரிமூர்த்திகளுக்கும், இஹ [இஹ] இங்கே, கிமாகதம் [கிமாகதம்] என்ன குறைவு வந்துவிட்டது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- உயர்ந்தவரைப்போலத் தாமும் அவர்கள் பெயரையோ, நடை, உடை, பாவனைகளையோ வைத்துக்கொள்ளுவதனால், அவர்கள் உயர்த்தியைத் தாழ்ந்தவர் பெறமுடியுமோ? அவர்கள் உயர்த்திதான் குறைந்துவிடுமோ. வீண் டம்பம் செய்வதாலென்ன பயன். பரிஹாஸந்தான் மிகும். 'அஜ' என்று ப்ரஹ்மாவுக்கும் பெயர், ஆட்டுக்கும் பெயர். 'ஹரி' என்று விஷ்ணுவுக்கும் தப்பளைக்கும் பெயர். 'கர்தப' என்று ஈச்வரனுக்கும் கழுதைக்கும் பெயர். பெயர் ஒன்றாயிருந்தால் ஒன்று மற்றொன்றாய்விடுமா? த்ரிமூர்த்திகள் உயர்ந்தவர். தாழ்மையில் ஆடு,தப்பளை, கழுதை மிக இளப்பம். உயர்ந்தவரைப் பார்த்து டம்பமாய் அவர்களைப்போலபெயரைவைத்துக்கொண்டதால் ஒன்றும் கைகூடாது. ஓர்சிற்றரசன் அகண்டபூமண்டல சக்ரவர்த்தி என்று பெயர் வைத்துக்கொண்டதால் என்ன ஸித்திக்கும்? கண்ணனைப்போல்ஒருவன் தானும்வாஸுதேவனென்ன பெயர் வைத்துக்கொண்டதையும் நினைக்கவேண்டும். நன்றாய் நெஞ்சில்

படும்படியான உபமானங்களாகக் காட்டுகிறார். பக்தியோடு அவர்களுக்குத் தொண்டரென்னுமெண்ணத்தோடு அவர்கள் பெயரை தரித்தால் அவர்களுடைய ஸாலோக்ய, ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யங்களை அடையலாம். டம்பத்தால் பயனில்லை. 'ப்ரஹ்மம்' என்னும் பெயரை பரமாத்மாவுக்கும், ஜீவனுக்கும், மூலப்ரக்ருதிக்கும் உபயோகிப்பதுண்டு. 'ஜீவன்' ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று சொன்னாலும், ப்ரஹ்மமென்று பேசினாலும் அவன் பரப்ரஹ்மமாகிவிடமாட்டான். (1)

அண்டஜா: புண்டரீகேஷு ஸமுத்ரேஷு ஜநார்தநா: ।
நீலகண்டாஶ்ச ஶைலேஷு நிவஸந்தி ந தேந தே ॥ ௨ ॥

அண்டஜா: புண்டரீகேஷு ஸமுத்ரேஷு ஜநார்தநா: ।
நீலகண்டாச்ச சைலேஷு நிவஸந்தி ந தேந தே ॥ (2)

(ப-ரை) புண்டரீகேஷு [புண்டரீகேஷு] - தாமரைப் பூக்களில், அண்டஜா: [அண்டஜா:] - அண்டஜங்களான பக்ஷிகளும், ஸமுத்ரேஷு [ஸமுத்ரேஷு] - கடல்களில், ஜநார்தநா: [ஜனார்தன:] - ஜனார்தனம் என்னும் பக்ஷிகளும், ஶைலேஷு [சைலேஷு] -மலைகளில், நீலகண்டா: [நீலகண்டா:] - நீலகண்டமென்னும் மயில்களும், வஸிக்கின்றன. தேந [தேந]- அதனால், ந தே [ந தே] - அந்தப் பெயரை உடையவரும் அதே இடத்தில் வஸிப்பவருமான ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களாகமாட்டா.

அவதாரிகைளுடன் தாத்பர்யங்கள்:— முன்பு பெயர் ஒற்றுமையால் மட்டும் பயனில்லை என்றார். பேரொற்றுமையோடு வஸிக்குமிடமும் ஒன்றாயிருந்தாலும், டம்பக்காரருக்கு அதனால் மட்டும் பயனில்லை என்கிறார். 'அண்டஜ' என்பது ப்ரஹ்மாவையும், முட்டையிற் பிறக்கும் பக்ஷியையும் சொல்லும். பகவானுடைய நாபீகமலத்தில் உதித்தவர் ப்ரஹ்மா. ஸமுத்ரத்தில் ஜனார்தனரென்னும் விஷ்ணு வஸிப்பவர்; அப்பெயரையுடைய பக்ஷிகளும் அங்கே வஸிப்பன. நீலகண்டரென்னும் ஈச்வரன் கைலாஸகிரியில் வஸிப்பவர்; நீலகண்டமென்னும் மயிலும் மலையில் வஸிக்கும். கர்வத்துடன் போட்டி போடப் பார்த்தால் ஒன்றும் கிடைக்காது. அவர்களுக்குத் தாஸராக அவர்கள் திருநாமத்தை

வஹித்து அவர்கள் இருக்கும் க்ஷேத்ரங்களில் தொண்டர்களாக வஸித்தால் அவர்களுடைய ஸாலோக்யாதிகளை யடையலாம். க்ஷேத்ரவாஸம் செய்து அவர்களை வணங்கினால் (நதேந - வணங்குவதால்) ஸாலோக்யாதிகளைப் பெறலாம். ஆனால் அவர்களே ஆகார். ஸாயுஜ்யமென்பது ஐக்யமன்று. 'விஷ்ணுரேவ பூத்வா' என்று 'விஷ்ணுவாகவே ஆகிறான்' என்பதற்கு 'விஷ்ணுபோல ஆகிறானென்று பொருள். 'தாத்ருகேவ பவதி' என்று கடோபநிஷத்து, 'ஏவ' என்பதற்கு 'இவ' என்று பொருள் என்று விளக்குகிறது. 'அஸந்நேவ ஸ பவதி' என்கிற தைத்திரீயச்ருதியில் 'அஸத் இவ பவதி' என்று அத்வைதவ்யாக்யானத்தைக் கவனிக்க வேணும். 'இவ, ஏவ, வா' இவற்றிற்கு ஒரே பொருளென்பர்.

காமம் லிகது ஸம்ஸ்தானம் கஶ்சித் ரூபஞ்ச பாஸ்வத: ।
அபித்திவிஹிதாலம்பமாலோகம் விலிகேத் கதம் ॥ ௩ ॥

காமம் லிகது ஸம்ஸ்தானம் கச்சித் ரூபஞ்ச பாஸ்வத: ।
அபித்திவிஹிதாலம்பமாலோகம் விலிகேத் கதம் ॥ (3)

(ப-ரை) கஶ்சித் [கச்சித்] - ஒருவன், (சித்திரமெழுதுபவன்), பாஸ்வத: [பாஸ்வத:] - ஸூர்யனுடைய, ஸம்ஸ்தானம் [ஸம்ஸ்தானம்] - பிம்பத்தையும், ரூபம் [ரூபம்] - வெண்மையான ரூபத்தையும், காமம் [காமம்] - வேண்டியமட்டும், லிகது [லிகது]- எழுதட்டும். அபித்திவிஹிதாலம்பம் [அபித்திவிஹிதாலம்பம்] - சுவற்றிலடங்காத, (திகந்தவ்யாப்தமான) ஆலோகம் [ஆலோகம்] - ஒளியை, கதம் விலிகேத் [கதம் விலிகேத்] - எப்படி எழுதுவன்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- மனமெனும் சித்திரப் பலகையில் பகவானுடைய திவ்யவிக்ரஹத்துடனும் குணங்களோடும் கூடிய அவரை ஒருவாறு எழுதி த்யானித்து, ஜ்ஞாநாநந்தம் போன்ற ஸ்வரூபப்ரகாசத்தையும், அவருடைய குணஷ்டகங்களையும் அவர் அநுக்ரஹத்தால் அடையலாம். ஸூர்யனுக்கு எப்படி ஆலோகமெனும்ஒளிஉலகெங்கும் வ்யாபித்திருக்கிறதோ, அப்படி ப்ரபஞ்சம்முழுவதும்ஈச்வரனுடையப்ரபையின்விஸ்தாரமென்பர்.

189906

நிகமை:— வேதங்களுக்கு நி[illegible] வேறொரு [illegible]மான திவ்யவாஸனையுண்டு. வேதங்கள் அநந்தங்கள்— ஆழ்வார் தமிழ்வேதத்தின் மகிழம்பூவாஸனை திருவடிகளில் கங்குலும் பகலும் நித்யகாலமும் ஒட்டிக்கொண்டிருக்கும். அநந்த வேதங்களின் எல்லையற்ற அபூர்வவாஸனைகள் திருவடிகளில் சேர்ந்துள. நிகமமென்று கடைத்தெருவுக்கும் பெயர். விவாஹகாலங்களில் கடைத்தெருவிலிருந்து உயர்ந்த வாஸனைகளை வாங்கித் தரிப்பர். இந்த வேதவேத்யனான திவ்யபுருஷனுக்குக் கடைத்தெருவென்ற நிகமங்களின் மணம் பொருந்தாது. வேதமென்னும் நிகமங்களின் வாஸனைப்பரப்பே சிறந்தது. கடைத்தெரு வாஸனைத்ரவ்யங்களின் மணம் க்ருதரிமம் (செயற்கை), வேதவாஸனை அக்ருத்ரிமம் (இயற்கை). இங்கே நிகமங்கள் தங்கள் சிரஸுகளோடு (வேதாந்தங்களோடு) திருவடிகளைத் தொழுகின்றன. பன்மையினால் அனந்தமான வேதங்களைக்காட்டி வாஸனையின் எல்லையற்ற பரப்பைக் காட்டுகிறது.

அங்க்ரியுக்மே— திருவடிஜோடியிலும். உந்திக்கமலத்தில் உலகங்களையெல்லாம் படைக்கும் காரணத்தன்மையைக் கண்டதும், அக்காரணம் லக்ஷ்மீபதியானதால், திருமார்பில் கண் சென்று சேர்த்தியை ஸேவித்து, திருவடிகளில் கண் சென்றது.

விபோ:— ப்ரபு. எங்கும் ஸ்வரூபத்தால் பரந்துளன். எங்கும் வாஸனையாலும் பரந்துளன். 'ஸர்வகந்த:' என்று நிகமங்களால் புகழ்பவன். ஸ்வயமாகவே எங்கும் பரந்த வாஸனையை உடையவர்.

ஆமோதவாஸி- வாஸனையேறியும். தூரம் சென்று பரவும் வாஸனையை ஆமோதமென்பர்.

நதேந ஶிரஸா- வணங்கின சிரஸால். நெடியோன் வணங்கித்தான் ஆண்டாள் திருக்கையால் மாலையை க்ரஹிக்கவேணும்.

மௌலிஸ்ரஜம் யதேந— உன் சிரோமாலையைத்

(17)

[illegible]ரிமறூஹ்ய தவோத்தரீயம்
[illegible]உன்னோரயிவாஸ்ய ஊத்தாம் ।
[illegible]பதிரேஷ பிபர்த்தி மௌலௌ
[illegible]ஸம்வாஸிதேஷ ஸகலாயிகாராம் ॥ ௧௭ ॥

சூடாபதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம்
மாலாமபி த்வதளகைரதிவாஸ்ய தத்தாம் I
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்த்தி கோதே
ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம் II (18)

(ப-ரை) கோதே - கோதாய்! ரங்கபதி: ஏஷ: - ரங்கபதியாகிய இவர், தவ உத்தரீயம் - உனது ஸ்தன உத்தரீயத்தையும், த்வதளகை: - உன்னுடைய குழற்கற்றைகளால், அதிவாஸ்ய - வாஸனையேற்றி, தத்தாம் - கொடுக்கப்பட்ட, மாலாமபி - மாலையையும், சூடாபதேந - கிரீடத்தின் ஸ்தானமான சிரஸால், பரிக்ருஹ்ய - பெற்று (அணிந்து), ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம் - மங்களத்தன்மை, மங்களம் செய்யும் தன்மையாகிய ஸௌபாக்யஸம்பத்தில் முடிசூடப்பெறும் அரிய யோக்யதையை, ப்ராயேண - மிகவும், பிபர்த்தி - தரிக்கிறார்.

கோதாய்! ரங்கப்ரபுவாகிய இவர் உன் திருமார்புக்கச்சையையும், நீ சூடி வாஸனையேற்றிக்கொடுத்த மாலையையும் சிரஸினால் க்ரஹித்து ஸௌபாக்யஸம்பத்தென்னும் ஐச்வர்யத்தில் முடிசூடப்பெறும் அரும்பெருமதிகாரத்தை நன்றாய் தரிக்கிறார்.

அவ:— (1) கந்யை ரூபத்தை வரிப்பாளென்பர். திவ்ய தேசத்தெம்பெருமான்கள் அழகுக்கடல்கள். மற்ற எம்பெருமான்களிலும் அழகுமிக்கோன் என்று சொல்லக்கூடியதால் ஆண்டாளால் மணாளனாக வரிக்கப்பட்டதை நேரில் தம் திருவாக்கால் பேசாமல் அதை வ்யஞ்ஜனம் செய்கிறார். ஆண்டாள் திருவாக்கினால், காளிதாஸர் அற்புதமாக ஈடுபட்டு வர்ணித்திருக்கும் பாற்கடலில் பள்ளிகொண்ட அழகுக்கடலைக்காட்டிலும், அழகரென்று அஸாதாரணமாகத் திருநாமம் பெற்ற திருமாலிருஞ்சோலை மாமாயனிலும், திருவேங்கடத்துக்கார்முகிலிலும், 'அரங்கம் தன்னுள் துயிலும் எங்கள் மாலே' என்று வரிக்கப்படும் மஹாபாக்யத்தை வர்ணிக்கிறார்.

(2) பெருமாள் ஸந்நிதியில் சிரஸில் பரிவட்டம் கட்டி மாலை சேர்த்து சிரஸில் ஸ்ரீசடாரியாகிய கிரீடத்தை நமக்கு சாற்றுவர். இங்கே ஆண்டாள் கோயிலில் பெருமாள் சிரஸ்ஸில் ஆண்டாள் திருமார்புக்கச்சைப்பரிவட்டமும், மாலையும் சூடப்படுகிறது. சிரஸிலிருந்து ஸர்வேச்வரத்வத்தின் சிந்ஹமான கிரீடத்தைக் கழட்டிவிட்டு சிரஸில் இவ்விரண்டையும் பரிக்ரஹித்தார். இவை ஸௌபாக்யஸம்பதபிஷேகத்திற்குக் கிரீடமாயிற்று. ஸர்வேச்வரத்தன்மையைக்காட்டிலும் இது பெரிய அதிகாரம்.

தவ உத்தரீயம்— உன் மேலாடையை. கோபிகைகள் கண்ணன் எழுந்தருளியதும் 'தங்கள் ஸ்தனகுங்குமங்களால் முத்திரைபோட்ட உத்திரீயங்களால் ஆத்மபந்துவான காந்தனுக்கு ஆஸனம் ஸமர்ப்பிவித்தார்கள்' என்றார் சுகர். கோதையின் ஸ்தன சந்தனம் கலந்த ஆடையை.

த்வதளகை: அதிவாஸ்ய— உன்னுடைய குழற்கற்றைகளால் மணமூட்டி. கூந்தல் முழுவதின் முழுவாஸனையையும் மாலையிலேற்றி. பன்மையால் குழலில் ஓரிடமும் பாக்கியில்லாமல் சூடி என்று காட்டுகிறார்.

தத்தாம்— கொடுக்கப்பட்ட.

மாலாமபி— மாலையையும்.

சூடாபதேந— சிகைஸ்தானத்தால்.

பரிக்ருஹ்ய— ஆதரத்துடன் க்ரஹித்து. 'பரிக்ருஹ்ய' என்பது மணம்புரிதலையும் சொல்லும். விவாஹஸந்தர்பத்தையும் விளக்குகிறது.

கோதே— கோதாய். ரங்கபதியையும் கோதையையும் 'ரங்கபதிரேஷ கோதே' என்று ஓரடியில் ஜோடி சேர்த்தார்.

ஏஷ ரங்கபதி:— இந்த ரங்கபதி. விவாஹப்ரகரணம் ஸ்வாமிக்கு எதிரில் ஸாக்ஷாத்காரமாகிறது. 'பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழிலரங்கம் தன்னுள் துயிலும் எங்கள் மாலே' என்ற வரிக்கப்பட்ட இவர்.

ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம்— ஸர்வேச்வரத்வாதிகாரத்திலும் பெரியதோர் ஸௌபாக்யைச்வர்யாதிகாரம். ஸமரான பெருமாள்களிலும் மஹத்தான ஓரதிகாரம். தமயந்திஸ்வயம்வரத்தில் பல தேவர்கள் கூடினார்கள். இங்கே ஒரே தேவர் பல ரூபங்களோடு பலராகக் கூடினர். எம்பெருமான்கள் கூட்டத்திலும் 'எங்கள் மாலே' ஒன்று மஹாவ்யாமோஹத்துடன் வரிக்கப்படும் மஹாஸௌபாக்யம்.

𑌭𑍂𑌯𑌸𑌾— அதிகமாக. பெருமாள்களுக்குள் தாரதம்மியத்தை நான் அறுதியிடேன். உத்ப்ரேக்ஷையாகக் கவிபாடுவது மட்டுமே தேவிமார் பேசலாம். (18)

𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌰𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌗𑌿𑌰𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃
𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌦𑌰𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 |
𑌆𑌮𑍋𑌦𑌮𑌨𑍍𑌯𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌭𑌿𑌃
𑌸𑍋𑌽𑌪𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌲𑌕𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 || ௧௯ ||

துங்கைரக்ருத்ரிமகிர: ஸ்வயமுத்தமாங்கை:
யம் ஸர்வகந்த இதி ஸாதரமுத்வஹந்தி ।
ஆமோதமந்யமதிகச்சதி மாலிகாபி:
ஸோZபி த்வதீயகுடிலாளகவாஸிதாபி: ॥ (19)

(ப-ரை) 𑌅𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌗𑌿𑌰𑌃 - ஒருவராலும் செய்யப்படாத ச்ருதிகள், 𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌃 - உயர்ந்த, 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃 - சிரஸ்ஸுகளால் (உபநிஷத்துக்களால்), 𑌯𑌂 - எவனை, 𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 - எல்லா நற்கந்தங்களையுமுடையவனென்று, 𑌸𑌾𑌦𑌰𑌂 - ப்ரியத்தோடு, 𑌸𑍍𑌵𑌯𑌂 - தாமாகவே, 𑌉𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 - தாங்குகின்றனவோ, (விவாஹம் செய்துகொள்ளுகிறார்களோ, மாலையிடுகிறார்களோ), 𑌸𑍋𑌽𑌪𑌿 - அவனும், 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌲𑌕𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 - உன் சுருட்டைக்குழல்களால் மணமேற்றிய, 𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌭𑌿𑌃 - மாலைகளால், 𑌆𑌮𑍋𑌦𑌮𑌨𑍍𑌯𑌂 - ஓர் புதிய விலக்ஷணவாஸனையை, 𑌅𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 - பெறுகிறார் (அநுபவிக்கிறார்).

அபௌருஷேயமான ச்ருதிகள் தங்கள் உந்நதமான சிரஸ்ஸுகளால் எவனை 'ஸர்வகந்தன்' என்று தாங்குகின்றனவோ (மாலையிடுகின்றனவோ), அவனும் உன்னுடைய வக்ரமான குந்தளங்களால் மணமூட்டப்பட்ட மாலைகளால் ஓர் புதிய மணத்தைப் பெறுகிறான். (உன் மாலை மணத்தைப்பெற்று உன்னை மணம் புரிந்து திருமால் ஓர் புதுமணம் பெறுகிறார்).

அவ:— எல்லா ஸுகந்தங்களையுடையவனென்று ச்ருதிகள் உன்நாயகன் உத்தமகந்தத்தைப் புகழ்ந்து தங்கள் தலைகளால். அந்த வாஸனையோடு கூடியவனைச் சூடி வாஸனை பெறுகின்றன.

ச்ருதிசூடைகள் ஸர்வகந்தனைச் சூடுகின்றன. எவனை அநந்த ச்ருதிதேவிகள் சிரஸால் ஆதரத்தோடு சூடுகின்றனவோ. ஸர்வகந்தத்திற்குள்ளகப்படாத கந்தமுண்டோ? உண்டு.

𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌃— ச்ருதிதேவிகளின் சிரஸ்ஸுகள் உபநிஷத்துக்கள், உபநிஷத்துக்களிலும் உந்நதமானதுண்டோ? ஸர்வோத்துங்கனை எட்டி அவனருகிலுள்ள உபநிஷத்துக்களும் ஸர்வோந்நதங்கள்.

𑌅𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌗𑌿𑌰𑌃— ஒருவராலும் செய்யப்படாமல் தாமாக நித்யமாயுள்ள ச்ருதிகளான வாக்குதேவிகள். கோதை ஸ்துதியில், கோதை கல்யாணத்தில், எல்லாம் இயற்கையானதேயல்லாது, செயற்கைப்பொருளே இல்லை.

𑌸𑍍𑌵𑌯𑌂— ச்ருதிதேவிகள் ஸ்வயமாக பூர்ணஹாவத்தோடு உன் மணாளனிடம் நாயகப்ரீதி செய்கிறார்கள்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃— ச்ருதிதேவிமாரான அபூர்வபரிமளமுடைய ச்ருதிதேவிகளான பெண்கள் தங்கள் சிரஸில் ஸர்வகந்தனென்று உன் மணாளனைச் சுமந்து அவன்பரிமளத்தைத் தங்கள் சிரஸில் ஏற்றுகிறார்கள்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃— சிரஸ்ஸுகளால். சுடர்மிகு சிரஸ்ஸுகளால்.
𑌯𑌂— யவனை.

𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃 𑌇𑌤𑌿— எல்லா ஸுகந்தங்களையுமுடையவனென்று. '𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃 𑌸𑌰𑍍𑌵𑌰𑌸𑌃' என்று சாண்டில்யோபநிஷத்து. சாண்டில்யர் பக்திஸூத்ரங்களியற்றியவர்; பஞ்சராத்ரத்தில் அர்ச்சைப்பெருமாள்களின் மஹிமையை விஸ்தரித்திருக்கிறார். ச்ருதியின் பதத்தையே இங்கே அமைக்கிறார்.

𑌸𑌾𑌦𑌰𑌂— '𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃' என்பதை அந்த உபநிஷத்து வாக்கியம் திருப்பித்திருப்பிப் பேசுகின்ற. அதனால் அந்த கந்தத்தில் ச்ருதியின் ஆதரம் தோற்றுகிறது. '𑌆𑌦𑌰𑌾𑌦𑌲𑍋𑌪𑌃' என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தை இங்கே நினைக்கிறார். 'அப்யாஸத்தால் தாத்பர்யமதிகம்'.

𑌉𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌿— உத்வாஹமென்பது விவாஹத்தையும் சொல்லும். ச்ருதிதேவிகள் உன் மணாளனை மணம் புரிகிறார்கள். எவனை வாஸனைமாலையாகத் தலையில் சூடுகிறார்களோ.

ஸோபி- அந்த ஸுகந்தக்களஞ்சியமான பெருமாளும்.

த்வதீயகுடிலாலகவாஸிதாபி:— உன்னுடைய சுருட்டைக்குழல்களால் மணமேற்றப்பட்ட. ஆர்ஜவமே வடிவுகொண்ட உனக்குக் குழல்களொன்றுதான் வக்ரகுணமுடையது. அதுவும் அழகுஸ்வபாவத்தால். 'ஸ்வபாவ வக்ராண்யளகாநி தாஸாம்' என்பர். மயிர்கள்சுருண்டிருப்பதுபோல வாஸனையும் சுருண்டுசுருண்டு வீசுகிறது (அகிற்புகை சுருள்வதுபோல).

ஸ்ரக்பி:— மாலைகளால். 'மாலைகளே மாலிகைகள்'

ப்ராயேண நீ சூடினாலும், மாலைகள் ஸேவார்ஹமான ஸௌஹ்ருத்யமான மாலைகளாகவேயிருக்கின்றன.

அந்யம்— எல்லாமென்பதிலும் அகப்படாத ஓர் புதிய.

ஸௌரபம்— வாஸனையை.

அதிகச்சதி— அடைகிறார், அநுபவிக்கிறார், பரிமள ரங்கனிலும் வாஸனாவஸிகனுண்டோ ? (19)

தந்யே ஸமஸ்தஜகதாம் பிதுருத்தமாங்கே
த்வந்மௌளிமால்யபரஸம்பரணேந பூய: ।
இந்தீவரஸ்ரஜமிவாததி த்வதீயாந்யா
கேகராணி பஹுமாநவிலோகிதாநி ॥ ॥ ௨௦ ॥

தந்யே ஸமஸ்த ஜகதாம் பிதுருத்தமாங்கே
த்வந்மௌளிமால்ய பரஸம்பரணேன பூய; ।
இந்தீவரஸ்ரஜமிவாதததி த்வதீயாந்யா
கேகராணி பஹுமாந விலோகிதாநி ॥ (20)

(ப-ரை) த்வந்மௌளிமால்யஸம்பரணேந - உன் சிரோமாலைகளைத் தரிப்பதால், பூயோ தந்யே - மிகவும் (முன்னிலும்) தந்யமான (க்ருதார்த்தமான), ஸமஸ்தஜகதாம் பிது:- எல்லாவுலகுக்கும் தகப்பனான (பகவானுடைய), உத்தமாங்கே - சிரஸில், த்வதீயாநி - உன்னுடையதான, பஹுமாநவிலோகிதாநி - கௌரவத்தைக் காட்டும் த்ருஷ்டிகளான, கேகராணி - அழகிய அரைக்கண்பார்வைகள், இந்தீவரஸ்ரஜம் - கருநெய்தல்மாலையை, ஆததீவ - செய்கின்றனபோலும்.

உலகுக்கெல்லாம் தகப்பன் பகவான். அவனுடைய சிரஸு உலகுக்கெல்லாம் தன்யம். உன் மாலைகளைத் தரிப்பதால் அச்சிரஸு இன்னம் மிக்கத் தன்யமாயிற்று. அதில் உன்னுடைய பஹுமானத்தோடுகூடிய ஆசைநிறைந்த அரைக்கண் பார்வைகள் கருநெய்தல்மாலைபோல சோபிக்கின்றன.

அவ:— (1) ரகுபதியின் திருவடிகள் எல்லோருக்கும் தன்யங்களென்றார் காளிதாஸர். 'தன்யை: பும்ஸாம் ரகுபதி பதை:'. ஸர்வலோக பிதாவான பெருமாள் சிரஸு எல்லா வுலகங்களுக்கும் ஸ்வயம் தந்யமே. உன் மாலைகளையணிந்து அது இன்னம் அதிசயமாக தந்யமாகிறது. வாஸனையின் அதிசயம் கிடைத்ததுமட்டுமல்ல, தன்யதையுமதிகமாயிற்று.

(2) ஆசையோடு தொடுத்த பூமாலைகள் ஸமர்ப்பிப்பதுமட்டுமல்ல. பாமாலைகள் ஸமர்ப்பிப்பது மட்டுமல்ல. ஓர் நாயனார் தம் கண்ணையே பிடுங்கித் தம் தேவனுக்கு அப்பினாரென்பர். அது பக்தியைக் காட்டினாலும் ஜுகுப்ஸா ரஸத்தையும் தரும். 'அஸிதேக்ஷணா' என்று ஸீதைப் பிராட்டிக்கு ராகவனிலும் ஏற்றத்தைபபணித்தார் இருவரையும் தராசில் நிறுத்து அநுபவித்த ருஷி. 'மையார் கருங்கண்ணிக் கமலமலர்மேற் செய்யாள்'. தன் கருவிழியின் அரைக்கண் திருஷ்டிகளின் நீலகாந்திகளால் ஸ்நேஹமயமான கருநெய்தல் புஷ்ப மாலையை சிரஸில் ஸமர்ப்பிக்கிறாள்போலும். 'யாரிடம் மனத்திற்கும் கண்ணுக்கும் நிர்ப்பந்தமுளதோ, அவரை வரிப்பது ச்ரேயஸ்ஸு' என்பர். மனமும் கண்ணும் இந்த வரர் முடியில் மாலையாக பத்தமாயின. பெருமாள் தாமரைக்கண்கள் தாமரைப் பூமாலையை ஸமர்ப்பிக்கும்; இவள் கண்கள் கருநெய்தல் மாலையை ஸமர்ப்பிக்கின்றன. 'மீனப்பெருமாளின் கண்கள் தாமரைக் காடுகளைச் சொரிந்தன' என்ற அநுபவத்தை நினைக்கவும்.

தந்யே— இதை முதலிலேயே பேசுவது அழகு. பெருமாள் தந்யர், பூயோதந்யர், (இன்னும் மேலும் மேலும் தந்யர்) என்கிறார். தந்யரென்று எத்தனை தரம் பேசினாலும் தகும். நம் பெருமாள் திருமுடிக்கு என்ன பாக்யம் கிடைத்தது.

ஸமஸ்த ஜகதாம்— உலகுக்கெல்லாம். இதை நடுவில் வைத்தது மிகவழகு, உலகுக்கெல்லாம் தந்யம், உலகுக்கெல்லாம் தகப்பன். கோதை விவாஹவிஷயத்தில் நம ஸ்வாமியிடம் இத்

துதியான பாமாலை கிடைத்ததும் பெருமாள் பாக்யம். அவரிடம் பிருதம் பெற்ற கவிஸிம்ஹம்.

பிது:— உலகுக்கெல்லாம் தகப்பனுடைய. 'உலகுக்கோர் தனியப்பன் தன்னை'. இவரை மாலையிடுவதால் நீ உலகுக்கெல்லாம் ஓர் தாயாகிறாய். விவாஹக்ஷணத்திலேயே ஸர்வலோகத்துக்கும் நீ தாயாகிறாய். 'பத்துப்பிள்ளைகள் பெறுவாயாக' என்று பெரியோர் அதிசயமாக விவாஹத்தில் ஆசீர்வதிப்பர்.

உத்தமாங்கே— அவர் திருவடி உலகுக்கெல்லாம் தந்யம். அவர் திருமுடி ஸர்வேச்வரகிரீடம் தரிப்பது. மௌளிபர்யந்தம் அவரை ஸேவிப்பது மஹாபாக்யம்.

த்வந்மௌளிதாமபரஸம்வஹநாத்— உன்னுடைய மாலைச் சுமையை வஹிப்பதால. மாலைச்சுமை, வாஸனைச்சுமை, கோதையின் ஸ்நேஹச்சுமை. சுமை சுமப்பதால் தந்யராவரோவென்று கேட்கலாம். இச்சுமை இன்பச்சுமை, இன்பமான வாஸனைச் சுமையென்று பதில். 'பாரத்தைப் பரிப்பதால்' என்னுமிடத்தில் 'பாரத்தை அழகாக, இன்பமாக, புருஷார்த்தமாகச் சுமக்கிறார்' என்பதைக் காட்ட 'ஸம்' என்று சேர்த்து 'ஸம்பரணத்தால்' என்று பேசுவது மிகவழகு. ஸமந்வயஸூத்ரத்தில் 'ஸம்'போல.

இந்தீவரஸ்ரஜம்— கருநெய்தல்பூமாலையை. 'இந்தீவராக்ஷி' என்பர். கண்ணை இந்தீவரமாக (கருநெய்தல்புஷ்பமாக) ரூபணம் செய்வர். கண்களிற கருங்காந்திகள நெய்தல்புஷ்பங்களாகின்றன. புஷ்பங்களுக்கு அன்பு ஸூத்ரமாகும். கண்கள் ஜ்யோதிஸ். ஸூர்யகிரணங்கள் கண்களுக்குள் புகுந்துள்ளனவென்பர். ஜ்யோதிர்மயமான கண்களிலிருந்து வரும் காந்திமாலை.

ஸ்வதீயாநி— உன்னுடையவைகளான.

ஆகேகராணி— பாதி மூடிய கண்களால், அரைக்கண் திருஷ்டிகளான.

ஸபஹுமாநவிலோகிதாநி— பஹுமானத்தோடு கூடிய பார்வைகள்.

ஆதததீவ— (நெய்தல்மாலையாக) ஆகின்றனபோல (மாலை ஸமர்ப்பிக்கின்றனபோல). 'ஹ்ருதயம்' என்பதை இங்கேயும் சேர்த்து அந்வயிக்கலாம். பூமாலைகள் சிலவே; கடாக்ஷமாலைகள் ஏராளமானவை. இப்படியும் அந்வயத்தைத் திருவுள்ளம்பற்றி 2-பாதிகளுக்கும் நடுவில் இம்மாலையை நடுநாயகமாக வைத்தது.

ரங்கேச்வரஸ்ய தவ ச ப்ரணயாநுபந்தாத்
அந்யோந்யமால்யபரிவ்ருத்திமபிஷ்டுவந்த: ।
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ் த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வஸமதாவிஷயைர்விவாதை: ॥ ௨௧ ॥

ரங்கேச்வரஸ்ய தவ ச ப்ரணயாநுபந்தாத்
அங்யோங்ய மால்ய பரிவ்ருத்திமபிஷ்டுவந்த: ।
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ் த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வஸமதா விஷயைர்விவாதை: ॥ (21)

(பதவுரை) வஸுதே-பூமிப்பிராட்டியே (விஷ்ணுபத்நியே), ரங்கேச்வரஸ்ய - ரங்கேச்வரனுக்கும், தவ ச - உனக்கும், ப்ரணயாநுபந்தாத்-பரஸ்பரஸ்நேஹவெள்ளத்தால், அந்யோந்யமால்யபரிவ்ருத்திம் - ஒருவருக்கொருவர் மாலைமாற்றிக்கொள்வதை, அபிஷ்டுவந்த: - நன்றாய்த் துதிப்பவரான, ரஸிகா: - ரஸிகர்கள், ந்யூநாதிகத்வஸமதாவிஷயை: - தாழ்த்தி உயர்த்தி ஸமத்வமென்ற கக்ஷிகளைப் பேசும், விவாதை: - விவாதங்களால், த்ரிலோகீம் - மூவுலகையும், வாசாலயந்தி - ஒரே சப்தமாகச் செய்கிறார்கள்.

அம்மா பூதேவியே! ரங்கேச்வரனுக்குமுனக்கும் அந்யோந்ய ஸ்நேஹத்தால் அந்யோந்யம் மாலைமாற்றிக்கொள்ளும்பொழுது அவ்வழகைத் துதிப்பவரான ரஸிகப்பெரியோர்கள் தாழ்த்தி, உயர்த்தி, ஸமம் என்ற கக்ஷிகளைப்பற்றிய விவாதங்களால் லோகத்ரயத்தையும் சப்திக்கச் செய்கிறார்கள் (அதிகப் பேச்சுக்காரராக்குகிறார்கள்).

அவ:- (1) 14-முதல் 7-ச்லோகங்களால் கோதைமாலையைப் புகழ்ந்தார். இந்த விவாஹத்தில் 'மாலை' வடகராகும். உலகத்திற்குப் புருஷகாரமாகும் ஆண்டாளுக்கும் புருஷகாரமாகிற பெருமையுடையது. மாலையை எத்தனை புகழ்ந்தாலும் தகும். விவாஹம் ஸப்தபதங்களால் ஏற்படும். 7-ச்லோகங்களால் மாலாவர்ணனம். ஆண்டாள் மாலையைமட்டும் புகழ்ந்ததை 7-ச்லோகங்களோடு நிறுத்தி, விவாஹத்திற்கு முக்யமான அங்கமான மாலை மாற்றுதலை வர்ணித்து விவாஹத்தைப் பூர்த்தியானதாகக் காட்டுகிறார்.

(2) இதுவரையிலும் கோதை கந்யாப்பெண்ணாயிருந்தாள்; இப்பொழுது பத்நியாகிறாள். 'அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணு பத்நீ' என்ற ச்ருதிக்கு விஷயமான பூமிப்பிராட்டியாகிறாள். இதைப்பற்றி இங்கே 'வஸுதே' என்று கூப்பிடுகிறாரென்ற ரஸத்தையநுபவிக்கவேணும். 'ஈசாநா' என்பதற்கு 'ஆண்டாள்' என்று பொருள். இவரை, இந்த ரங்கேச்வரரை ஆண்டாள்— ஜகத:, உலகத்தை ஆண்டாள்.

(3) விவாஹத்தில் கந்யையைச் சேர்ந்தவர் கந்யையை உயர்த்திப்பேசுவர்; வரனைச்சேர்ந்தவர் வரனை உயர்த்திப் பேசுவர். உண்மையில் இருவரும் மஹிமையில் ஸமமென்று சொல்லக் கூடுமானாலும், அந்தந்த பக்ஷத்தார் அந்யோந்யம் ஏற்றத்தாழ்ச்சியைப் பேசுவதும், இரைச்சல் போடுவதும், ரஸப்பேச்சுகள்; அதெல்லாம் தத்துவமல்ல; 'ப்ரணயாநுபந்தாத்', தங்கள் பரிவின் மிகுதியால், ரஸத்தின் மிகுதியால், ரஸிகர்களாகப் பேசுகிறார்கள்.

ரங்கேச்வரஸ்ய— அண்டர்கோன் அணியரங்கம் – புருஷ ஸூக்தத்தால் புகழப்படும் ஸர்வேச்வரனுக்கும்.

தவ ச— உனக்கும்.

ப்ரணயாநுபந்தாத்— ஸ்நேஹப்பெருக்கால். முன்பே பந்தம் (பதிபத்நீ ஸம்பந்தம்) உளதே. இப்பொழுது கோதையென்ற கந்யையாக அவதரித்ததில் ஆசையோடு கோடித்த இந்த வதுவையில் ஸ்நேஹம் மிகப்பெருகியது. இப்படி ஸ்நேஹப்பெருக்குக்காகவே அவதரித்து வதுவை கோடிப்பது. அரங்கனும் இவரவதரிக்கப்போகும் திக்கை நோக்கிக்கொண்டேயிருந்தார். 'ப்ரணயாநுபந்தாத்' என்பதை 'வாசாலயந்தி' என்பதற்குக்காரணமாகவும் அந்வயிக்கலாம். அப்படி உச்சாவசமாக தாழ்த்திப் பேசுவதும் ஸ்நேஹப்பெருக்கால்தான். நிந்திப்பதில் தாத்பர்யமேயில்லை, ஸ்நேஹத்தால் மற்றொன்றைப் புகழ்வதில் மட்டும் தாத்பர்யம். நஹிநிந்தாந்யாயம்.

அந்யோந்யமால்யபரிவ்ருத்திம்— ஒருவருக்கொருவர் மாலை மாற்றிக்கொள்வதை. பெரிய பிராட்டியார் ஸ்தனசந்தனமாலையான வைஜயந்தீ ஆண்டாளுக்கும், ஆண்டாள் மாலை திருவுடன் கூடிய பெருமாள் மார்புக்கும் சேருகிறது. கழுத்திலுள்ள மாலைகளின் மாற்றம். பெருமாள் சிரஸிலேறிய மாலை இந்த மாற்றத்தில் வாராது. அதன் ஏற்றத்தை மறுப்பாரொருவருமில்லை.

அபிஷ்டுவந்த:— நன்றாய்த் துதிக்க ஆசைப்படுபவர். துதிக்கும் ஆசையால் அதிகமாகப் பேசுவது ஸஹஜமே. ஒருவரைத் துதிக்கையில் அத்துதிக்காகவே மற்றொருவரைக் கொஞ்சம் தாழப்பேசுவதும் ஸஹஜமே. இங்கே சத்ருப்ரத்யயம் அழகு. ஹேதுப்பொருள். அதற்காகவே அடுத்தாப்போல் கிரியையையும் வைக்கிறார்.

வாசாலயந்தி- ஒரே சப்தகோஷமாக்குகிறார்கள். அதிகப் பேச்சுக்காரர்களாகிறார்கள். 'ஸத்யாய ஹிதஹாஷிணாம்' என்றிருப்பவரையும் 'பஹுபாஷிகளாக' அதிகப்ரஸங்கம் செய்யும்படி செய்துவிடுகிறார்கள். ஒரு கக்ஷியைக் குறைத்துப் பேசவே பேச்சு தடித்துவிடுகிறது.

வஸுதே— அம்மா பூமிதேவியே! பூமி முழுவதையும் (மூவுலகையும்) இக்கலஹசப்தத்தால் உத்கோஷிக்கச்செய்கிறார்கள்; வாசாலராக்குகிறார்கள். அம்மா நீ பூமிப்பிராட்டியானதால் பூமியிலுள்ளாரெல்லாரும் பெண்கக்ஷி; ஏகக்கூக்குரலாய்விடுகிறது.

ரஸிகா:— ரஸப்பேச்சுகளம்மா, நிந்தைபோன்றதும் துதிகளேயம்மா. உன் நாயகனை இளப்பமாக்காது; ஆகையால் நீ தாபப்படவிடமில்லை. உன்னையும் இளப்பம் செய்யாது; ஆகையால் உன் நாயகனுக்கும் தாபத்திற்கு இடமில்லை. எல்லாம் ஒரே ஸ்நேஹரஸம், ஸ்நேஹப்பெருக்கு. உண்மையில் விரஸமான எண்ணமே ஒருவருக்குமில்லை.

த்ரிலோகீம்- த்ரிபுவனகமனமான, த்ரிலோகேச்வரரான. தம்பதிகளின் விவாஹத்தில் மூவுலகஜனங்களும் பேசுகிறார்கள், பெண்கக்ஷியோர், பிள்ளைகக்ஷியோர், மத்யஸ்தர் ஆகிய மூவரையும் முறையே தாழ்ச்சி, உயர்த்தி, ஸமம் என்ற மூன்று கக்ஷிகளையும் பேசச் செய்கிறார்கள். மூவுலகையும் சப்தமயமாக்குகிறார்கள்.

ந்யூநாதிகத்வஸமதாவிஷயை:— ஒருவர் தாழ்த்தி, ஒருவர் உயர்த்தி, இருவரும் ஸமம் என்ற மூன்று கக்ஷிகளான.

விவாதை:— விவாதங்களாலே. விவாஹமும், விவாதமும் ஸமர்களுக்குத்தான் சோபிக்குமென்பர். இந்த விவாஹத்தில் வதூவரர்கள் ஸமராயிருந்து தீர வேண்டுமாகையால் விவா

தப்படுகிறவர்களும் ஸமர்களாகி ஸமத்வக் கக்ஷியையே ஸித்தாந்தப்படுத்துகிறார்கள். முன் கக்ஷிகளிரண்டும் பூர்வபக்ஷம். ஸமத்வம் ஸித்தாந்தம். 'துல்யகுணமான வதூவரர்களை ஒன்று சேர்த்து (ஸமமாகச் சேர்த்து) ப்ரஜாபதி நீண்டகாலமான அபவாதத்தை நீக்கிக்கொண்டார்' என்று சாகுந்தளம். 'துல்ய' என்ற அடைமொழியோடு த்ருப்தியில்லாமல் 'ஸமமாகச் சேர்த்து' என்ற க்ரியாபதத்தையும் கவி வைத்தார். 'ஸமச்சேர்த்தி அரிது அரிது'. (21)

தூ³வாதளப்ரதிமயா தவ தே³ஹகாந்த்யா
கோ³ரோசநாருசிரயா ச ருசேந்த்³ரியாயா: ।
ஆஸீத³நுஜ்ஜி²தஶிகா²வளகண்ட²ஶோப⁴ம்
மாங்க³ள்யத³ம் ப்ரணமதாம் மது⁴வைரிகா³த்ரம் ॥ ௨௨ ॥

தூர்வாதளப்ரதிமயா தவ தேஹகாந்த்யா
கோரோசனருசிரயா ச ருசேந்திராயா: ।
ஆஸீதநுஜ்ஜிதசிகாவளகண்டசோபம்
மாங்கள்யதம் ப்ரணமதாம் மதுவைரிகாத்ரம் ॥ (22)

(ப-ரை) மது⁴வைரிகா³த்ரம் - வேதத்தைத் திருடிய மதுவென்னும் அஸுரனுக்குச் சத்ருவான மதுஸூதனனுடைய திருமேனியானது, தூ³வாதளப்ரதிமயா - அருகம்புல்லைப்போல பசுமையான, தவ தே³ஹகாந்த்யா - உன் திருமேனியொளியாலும், கோ³ரோசநாருசிரயா - கோரோசனையைப்போல் பொன்னிறமான, இந்த்³ராயா: - லக்ஷ்மியின் ருசா - காந்தியாலும், அநுஜ்ஜி²தஶிகா²வளகண்ட²ஶோப⁴ம் - மயில்கழுத்தின் சோபையை விடாததாகி, ப்ரணமதாம் - அடிபணிபவர்க்கு, மாங்க³ள்யத³ம் - மங்களத்தை யளிப்பதாயிற்று.

மதுஸூதனனுடைய திருமேனியானது அருகம்பில்லைப்போல பசுமையான உன் திருமேனியின் பச்சைக் காந்தியாலும், கோரோசனையைப்போன்ற லக்ஷ்மீதேவியின் பொன்னிறத்தாலும், மயிலின் கழுத்தின் சோபையை விடாமல் வஹித்துக்கொண்டு அடிபணிபவர்க்கெல்லாம் மங்களத்தை யளிக்கிறது.

அவ:— மாலைமாற்றி விவாஹம் நடந்து, கோதையும் பெரிய பிராட்டியாரோடு விஷ்ணுபத்நியானாள். பிராட்டிமாரிருவரும்

உபயநாச்சிமாராய் இருபக்கமுமிருக்கிறார்கள். அவர்கள் காந்திகள் பெருமாள் கரியதிருமேனியில் பரவுகின்றன. கோதையின் நிறம் அருகம்புல்லைப்போன்றது. பெரிய பிராட்டியார் நிறம் பொன்னிறம், கோரோசனைபோன்றது.. இருபக்கமும் இருவித காந்திகளும் பெருமாள் நீலத்திருமேனியில் இடைவிடாமல் பரவுகின்றன. நீலகண்டமென்னும் மயிலின் கழுத்தைப்போல பெருமாள் திருமேனி முழுவதும் ஆகின்றது. விவாஹத்தில் தம்பதிகளைப் பார்வதீபரமேச்வரமிதுனத்திற்கு ஒப்பிடுவார். அவர்களுடம்புமொன்றாயுள்ளது. மாஶ்லேஷமாகில்பிரிவுக்கே ப்ரஸக்தியில்லாமலிருக்கும் உபயநாச்சிமார் திருமேனிக்காந்திகளும் பெருமாள் திருமேனியும் ஒன்றாகச் சேர்ந்து பிரியாச் சேர்த்தியாகின்றன. நீலகண்டரை மூன்றாவது அடியிலும், கௌரியை இரண்டாமடியிலும் ஒருவாறு ஸூசிக்கிறார். 'மஹேச்வரம் பர்வதராஜபுத்ரீ' என்று பாஞ்சாலீஸ்வயம்வரத்தில் த்ரௌபதீ அர்ஜுனனை மாலையிட்டதை வ்யாஸர் வர்ணித்தார். 'அநுஜ்ஜித' என்று நீங்காச் சேர்த்தியை ஸூசிக்கிறார். நீலகண்டருக்குக் கழுத்துமட்டும் நீலம்; மயிலுக்குக் கழுத்து இப்படி விசித்ரவர்ணமாயிருக்கும். பெருமாள் திருமேனி முழுதும் தேவிமார் காந்திகளால் மயில் கழுத்துக்கொப்பாகிறது. சிவசப்தம் மங்களத்தைச் சொல்லும். நீலகண்டசோபையுடைய திருமேனி மங்களமாகிறது என்று ஓர்விதமான வேடிக்கை. ஈச்வரர் இத் தம்பதிகளுக்குப் பௌத்திரர்; அவர்புத்ரர்களான அருகம்புல்லை விரும்பும் பிள்ளையாரும், மயில்வாஹனரான கார்த்திகேயரும் ப்ரபௌத்திரர்கள். 'சதுர்முகர் ஈச்வரர் முதலியவராகிய புத்திரபௌத்திரர்களோடு கூடிய ஸீதாஸமேதரான ராமனென்னும் க்ருஹமேதிக்கு நமஸ்காரம்' என்று ரகுவீரகத்யமங்களம் ஸாதித்ததை இங்கும் நினைக்கவேணும். 'சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர்திருவாகமெவ்வாவியீரும்'

தூ³வாதளப்ரதிமயா— அருகம்புல்லைப்போலொத்த பசுமையான. இது மங்களத்ரவ்யம். விக்நேச்வரப்ரியம், விஷ்வக்ஸேநாராதனஸூசகம்.

தவ தே³ஹகாந்த்யா— உன் திருமேனி காந்தியால்.

கோ³ரோசநாருசிரயா— கோரோசனை வர்ணமான,

ஸம்ச்ரயாத் ச்ரியா — லக்ஷ்மிதேவியின் காந்தியாலும். கோதையும் ஓர் பக்கத்தில் பத்நியாகக் கூடநிற்பதில் லக்ஷ்மீதேவியின் ருசியையும் ஸூசிக்கிறார். இந்த ஸந்தோஷத்திற்கு இத்தனை காலமாய்க் கோடித்துக்கொண்டிருந்ததால் விவாஹக்ஷணத்திலேயே தன்னோடு ஜோடியாக மற்றோர்பக்கத்தில் நிறுத்திவைத்து ஸந்தோஷித்தாள். ரோசனு, ருசிரா, ருசா என்று மூன்று தரம் ருசியைக் காட்டும் சப்தங்கள். ருசிம் ராதி, ருசியைக் கொடுக்கிறது, ருசிரம்.

ஆஸீத் — ஆயிற்று.

ஸந்த்ருஷ்ட ஶிகாவல கண்டஶோபம் — 'சிகாவள' என்பது மயில், நீலகண்டம். அதன் கழுத்தின் சோபையை விடாமல்.

மாங்கல்யதம் — திருமேனியே மங்களத்தையளிக்கிறது. பெருமாள் திருமேனியே ஆச்ரிதருக்கு 'மாங்கல்யத்தை'க்கொடுக்கும்; பார்வதீச்வரர்கள் மாங்கல்யத்தை, தாம்பத்யத்தை, மங்களத்தை, கொடுப்பதென்பதும் பெருமாள் அவர்களுக்குள்ளிருந்து கொடுப்பதால்தான். பெருமாள் திருமேனியுடன் உபய நாச்சிமார் திருமேனிக்காந்திகள் பிரியாமல் சேர்ந்ததும், அவர்கள் திருமேனிகள் கூடிய சுபாச்ரயம் ஸகல மங்களங்களையும் அளிக்க யோக்யமாயிற்று. இத் தம்பதிகள் பிரியாமல் சேர்ந்தே ஸகல ச்ரேயஸ்ஸுகளையும் அளிப்பவர். 'மாங்கல்யதந்துநாநேந' என்ற ச்லோகத்தையும் ஸூசிக்கிறார். மாங்கல்யத்தைக் கொடுக்கும் நூலென்று பொருளையும் ஸூசிக்கிறார்.

ஶ்ருதிவிஹாரி — இதனால் சில அழகிய பொருள்களின் வ்யஞ்ஜனம். (1) வேதங்களாகிய கண்களையிழந்த ப்ரஹ்மாவுக்கு வேதங்களைத் திருப்பிக்கொணர்ந்து அவருக்கு ஞானப்ரதானம் பண்ணி மயர்வை நீக்கிய அவதாரம். புத்ரனுக்கும் லோகத்திற்கும் வேதமளித்த அவதாரம். இதனால் ப்ரம்மாவின் நிலைப்பையும் இங்கே சேர்த்து பௌத்திர ப்ரபௌத்திரர்களோடு (பேரர், கொள்பேரரோடு) புத்திரரையும் சேர்த்துத் தம்பதிகளை க்ருஹமேதிகளாக அநுஸந்திப்பது. 'புத்திரரைப் பெற்று' என்று ஆசீர்வதிப்பர். ப்ரபௌத்திரர் பர்யந்தம் இங்கே காட்சி.

(2) சரணாகதி ச்லோகமடங்கிய கீதை பாடினதும் மதுஸூதனன் திருவாக்கு. கண்ணில்லாத புத்திரர்களான நமக்கு கீதோ

பநிஷத்தை அருளிய திருமேனி. வெகுகாலமாக நஷ்டமான யோகத்தைத் திருப்பிக்கொண்டுவந்து உபதேசித்தது கீதாசார்யன் திருமேனி. சரணாகதியை யுபதேசித்தது போதுமோ? அநுஷ்டானமில்லையாயின் அப்ரமாணமென்பரே. பிராட்டிமார்சேர்த்தியில் ஸாக்ஷாத்ஸமான தசையில் விசிஷ்டத்திலன்றோ ஹரத்தைஸமர்ப்பிக்கவேணும். கோதையாகிய பக்கபலமும் சேரவே பெருமாள் தப்பியோட வழியில்லை. பெரியபிராட்டியாருக்குப்ரஜா ரக்ஷணத்தில் பார்ச்வபலம் (பக்கபலம்) சேர்ந்து விட்டதும், அவனுடைய ருசிக்கு ஸந்தோஷத்திற்கு அளவில்லை.

(3) நாம் ஜ்ஞானவிரோதிகள், அஜ்ஞானக் களஞ்சியங்கள். மதுவென்னும் அஸுரனைச் சீறியதுபோல, நம்மையும் சீறுவது உசிதம். இது 'வைரி' என்பதால் ஸூசிக்கப்படுகிறது. பிராட்டிமார் இருபக்கமும் இருக்கவே அவர்கள் காருண்யப்ரபை படியவே அச்சீற்றம் பரந்துபோகிறது.

(4) இம் மூவர் சேர்த்தியில் வணங்கி ஆதிராஜ்யத்தை அநுபவித்தார்களென்று அடுத்த 23-ம் சுலோகத்திலும், ஆத்மபரம் ஸமர்ப்பிப்பதற்காகப் புருஷகாரத்தை 24-லும், பெருமாள் ஸ்வாதந்த்ரியத்தைக் குறைத்து அநந்தாபராதங்களைப் போக்குவதை 25-லும், 'ப்ரபத்ய' என்று ப்ரபத்தியை 26-லும் பேசிப் போவதையும் கவனிக்க.

(5) ப்ரஹ்மருத்ராதிகளைத் தம் புத்திர பௌத்திரர்களாகத் தம் திருமேனியிலே சேர்த்துக்கொண்டிருப்பதாக, விசிஷ்டமாகப் பெருமானை யநுபவிப்பார் மயர்வறமதிநலமருளப்பெற்றவர். 'புரமொரு மூன்றெறித்தமரர்க்கு மறிவியந்தரனயனென வுலகழித்தமைத்துளனே' என்று தொடக்கத்திலும், கடைப்பத்தில் 'சடையானைப்பாகத்துவைத்தான் தன்பாதம்பணிந்தேனே' என்றும்பாடி கடைத்திருவாய்மொழியிலும்'முனியேநான்முகனே முக்கண்ணப்பா' என்று பாடியுள்ளது. 'உலகுக்கோர் தனியப்பனை' என்பதை 'ஸமஸ்த ஜகதாம் பிது:' என்று பாடி அதே பாசுரத்தில் 'பிரமனப்பனை யுருத்திரனப்பனை முனிவர்க்குரியவப்பனை யமரரப்பனை' என்று முன்னுள்ளதை இங்கே அநுஸந்திக்கிறார். எல்லோர்க்கும் அப்பன் என்றதால் 'தமியனேன் பெரியவப்பனே' என்றபடி எனக்கும் பிதாவென்று கருத்து.

என் தகப்பன் விவாஹம்; என் தாய் விவாஹம்; என் தந்தைதாய் விவாஹத்தில் நான் மங்களம் பாடுகிறேன். இதென்ன பாக்யம்; என்ன ஆச்சர்யம்! 'ஸர்வான் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:' என்றபடி இந்தத் தம்பதிகளின் சேர்த்தியின் மங்களத்திற்காக எல்லாத் தேவரையும் நினைக்கலாம், கால் கட்டலாம், பிராட்டி அலங்கரிக்கும் திருமேனியில் புத்ரபௌத்ராதிகளான அவர்கட்கும் பாகமுண்டு. (6) 'மதுவைரி' என்றதால் மறையையநுக்ரஹித்த உபகாரத்தைக் காட்டுகிறது. விஷ்வக்ஸேநரான ஆழ்வார் மூலமாகவும் இப்பொழுது பத்நியாகச் சேர்ந்த கோதை மூலமாகவும் தமிழ்மறைகளை அநுக்ரஹிக்கும் உபகாரமும் இங்கே ஸூசிக்கப்படுகிறது. ஸம்ஸ்கிருதவேதங்களைக் கொணர்ந்தது, வேதம் தமிழ்செய்த, தெளியாத மறை நிலங்கள் தெளியச்செய்த இத்தமிழ்மறைகளால் ஸபலமாயிற்று.

அர்ச்யம் ஸமர்ச்ய நியமைர் நிகமப்ரஸூநை:
நாதம் த்வயா கமலயா ச ஸமேயிவாம்ஸ: ।
மாதஶ்சிரம் நிரவிஶந் நிஜமாதிராஜ்யம்
மாந்யா மநுப்ரப்ருதயோऽபி மஹீக்ஷிதஸ்தே ॥ ௨௩ ॥

அர்ச்யம் ஸமர்ச்ய நியமைர் நிகமப்ரஸூநை:
நாதம் த்வயா கமலயா ச ஸமேயிவாம்ஸ: I
மாதச்சிரம் நிரவிசந் நிஜமாதிராஜ்யம்
மாந்யா மநுப்ரப்ருதயோபி மஹீக்ஷிதஸ்தே II (23)

(ப-ரை) மாத: - தாயே, மாந்யா:-பூஜ்யர்களான, தே- அந்த, மஹீக்ஷித: - அரசர்களான, மநுப்ரப்ருதயோऽபி - மநு முதலியவரும், த்வயா - உன்னோடும், கமலயா ச - தாமரையாளோடும், ஸமேயிவாம்ஸ: - ஸமேதரான (கூடிய), நாதம் - நாதனை, அர்ச்யம் - அர்ச்சிக்க யோக்யனை, நியமை: - நியமநிஷ்டைகளோடு, நிகமப்ரஸூநை: - மறைகளான புஷ்பங்களைக்கொண்டு, ஸமர்ச்ய - நன்றாக அர்ச்சித்து, சேர்த்தியில் சேர்த்து அர்ச்சித்து, நிஜம் - தங்கள் ஸ்வந்தமான, ஆதிராஜ்யம் - உலகுக்கு ஆதிபத்யத்தை, சிரம் - நீடூழிகாலம், நிரவிசந் - அநுபவித்தார்கள்.

பூர்வ நிர்வாஹ பரித்ராணமும், நம் அண்ணாவின் பதில் ஸம்ரம்பமும்.

ஸ்ரீசின்ன ஆஸூரிஸ்வாமியால் ஸாதிக்கப்பட்ட "பூர்வநிர்வாஹபரித்ராணம்" நம் அண்ணாவின் தத்வப்ரதிஷ்டையைப் பாரா பாராவாக எடுத்துக் கண்டித்து எழுதியது. ஸாஸ்த்ரஸரணிக்கு மிகப் பொருந்தியதும், விஷயபோதநங்களிலும், உபபாதநசைலிகளிலும் ஸஹ்ருதயருக்கு பதே பதே ஹ்ருத்யமுமான பரித்ராணக்ரந்தத்தை அரும்பண்டிதர்கள் மெச்சுவதை நாமறிவோம். ப்ரதிஷ்டா, பரித்ராணம் இவ்விரண்டு க்ரந்தங்களைப் படிக்கையில் 'யதஸாரம்' என்று தொடங்கிய 3 ஸீதாச்லோகங்களும் பதே பதே மனதிற்கு வந்தன. ஸந்தர்ப்பத்தில் 'ஸத்ப்ரதிஷ்டா:' என்னுமிடத்தில் ப்ரதிஷ்டா சப்தம் லயவாசியாவதுபோல, 'தத்வப்ரதிஷ்டா' நாமத்தில் லயப்பொருளைக் கொண்டால், அத்திருநாமம் உபபந்நமாகும். சாஸ்த்ரமும் தத்வப்ரதிஷ்டிக்கே பதே பதே ப்ரகாசிக்கும். இவர் ப்ரதிஷ்டாநாமகக்ரந்தத்திற்கு வேறு விதமாக நாமஸாமஞ்ஜஸ்யம் கிடையாது. ஸந்ந்யாஸாஸ்ரமி பெருமாளுடைய ஸர்வரக்ஷகத்வத்தையிலேயே மிக்க ஆதரமுடையது; அது ஸாகாரமுள்ள விச்வத்திற்கு ஸத்தில் ப்ரதிஷ்டையைப் பேசிற்று; இவர் ஸாகரதீரத்தில் 'ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி' என்ற ஆபாணகப்படி பெருமாளுக்கு ப்ரதிஷ்டையைப் பேசுகிறார். ப்ருஹதாரண்யகத்தில் 'ஸதாயதந:' என்ற பேச்சுண்டு. ஆனால், 'ஸதி ஸம்பத்ய' என்றபடி 'ஸதி லய:' என்று அதற்குத் தாத்பர்யம். 'ஸத்தின் லயம்' என்பது இவர் பொருள்போலும். இவர் 'ப்ரதிஷ்டை' ஸத்திற்கே ஸாக்ஷாத்தாக ப்ரதிஷ்டையை ஆசையுடன் ஸங்கல்பிக்கிறது. பெருமாளுடைய ஸ்வலயஸங்கல்பம் இவர் ருசிப்பது; பெருமாள் கர்த்ருகமான ஸாகரலயஸங்கல்பத்தை நாம் பேசுவது. இவ்விசாரமெல்லோர்க்கும் பொது, ராமாயணச்லோகம் பொது. ஈடும் நம்மெல்லோர்க்கும் பொது. சிலஸாராம்சங்களைக் காட்டுவோம்.

1. 'இத்தை' என்பது 'கடலை' என்றிருக்கவேண்டுமென்று பயங்கரின் நவீன ஆக்ஷேபம். மூலச்லோகத்தில் "ஸாகரஸ்ய" என்று எதிரேயுள்ள கடலைக் குறித்துளது. அதற்கு 'இத்தை' என்று ஊஹ்யாகாரமான உபலக்ஷிதப் பொருளை வ்யாக்யானம் எடுத்துக்காட்டுவது உசிதம், அபேக்ஷிதம். இவர் கக்ஷிப்படி 'இற்றை' என்று 'ஹ்ய' சப்தத்தின் பொருளுரைப்பது வ்யாகரணபாதிதம், அத்யந்தாஸங்கதம். மூன்று நாள் கிடக்கை விஷயமாக 'ஹ்ய' சப்தத்தை வ்யாக்யானம் 'இன்று'என்று பணிக்குமோ? மேலும் 'இத்தை' என்று கர்மநிர்தேசம் ஆவச்யகம். இவர் பக்ஷத்தில் 'கர்மத்தை'ப் பிச்சை வாங்க வேண்டும். 46-49-பக்கங்கள்.

2. பெருமாள் முடிவு ஸங்கல்பத்தை ருசிக்கும் 'ப்ரதிஷ்டை' ப்ராயோபவேசபக்ஷத்தை ராத்தாந்தபக்ஷமாக உபபாதித்தது. எம் சிறு விமர்சத்திற்குப் பிறகு அதை விட்டது. ஸ்ரீ ஆஸூரிஸ்வாமி முதலில் ப்ரமநிராஸத்தின் ஓர் மாத்ருகையில் ப்ராயோபவேசத்தைப்பேசியதாயும், பிறகு அதைமாற்றி வேறாக அச்சிட்டதாயும் இவர்பதில் விஜயத்வஜத்தில் கூக்குரலிடுகிறார். ஒப்பியே பேசுவோம். எழுதினதைத் திருத்தினால் என்ன? சிஷ்யசிங்கப்ரப்ருதிகள் திருச்சின்னமூத, மிக்க ஆடம்பரத்துடன் இவரச்சிட்டு மார் தட்டிய 'ப்ராயோபவேச' பக்ஷத்தை இப்பொழுது தள்ளிவிட்டதை இவர் மறந்தாரோ? ஹோவிநூராஜீயம் இவர் பக்ஷத்திற்கு விருத்தமென்று எழுதி அச்சிட்டதை இவர் இப்பொழுது மாற்றவில்லையோ? ப்ராக்ருதச்லோகவிஷயத்தில் இவர் 'விஜயத்வஜத்தில்' இக்கூக்குரலைத்தான் காண்கிறோம். 'வாத்ஸல்யவிஜயத்வஜம்' வரப்போவதாக ஓர் முகவுரை (உபோத்காதம்) வந்தது. 'த்வஜம்' கிளம்பவேயில்லை. கிளம்பப்போவதில்லை என்று எமக்குப் பதில் அநுக்ரஹிக்கப்பட்டது. ப்ராக்ருதத்தை ஸாதிப்பது உபோத்காதமென்னும் முகவுரை; இவர் உபோத்காதம் ப்ராக்ருதத்தின் அஸித்தியின் பொருட்டாயிற்று. கந்தாசதக்ரந்திலமாயும் ஓர் த்வஜம் ஸ்தைக்கமுடியவில்லை. 'நமஸ்காரவிஜயத்வஜம்' என்று ஓர் த்வஜம் கிளம்புவதாகப் பறையடிக்கப்பட்டது. அதுவும் தரைக்கு மேல் கிளம்பவில்லை. மண்ணுக்குள்ளிருக்கலாம். திருப்பாவை முதல் பதிப்பில் 'உம் தலைமேல் சடாரி ஸாதிப்போமென்று' சீறிச் சினந்து பாதங்களை நீட்டினார்; இரண்டாம் பதிப்பில் ஸத்வம் கொஞ்சம் உந்மேஷமாகி, தாமே வெட்கப்பட்டோ, அச்சப்பட்டோ அச்சொற்களை நீக்கினார். நமஸ்காரவிஜயத்வஜ முகவுரையில், இரண்டாம் பதிப்பில் நடுவில் மடங்கிய பாதங்கள் மறுபடி நீண்டன. இடையில் வந்த ஸத்வோந்மேஷம் க்ஷணிகமாயிற்று. காலை நீட்டித்தானே நமஸ்காரம் ஸித்திக்கவேணும் என்ற நினைப்பாயிருக்கலாம். பயங்கரநாமத்திற்கேற்றபடி இவர் பயப்படாவிடினும் ப்ரமாணவசனப்படி ப்ராணன்கள் ஊர்த்வமுகமாகச் செல்ல நேருமே என்று எமக்கு இவர் நிமித்தமாக பயமுண்டாயிற்று. மர்மப்ரகாசத்திற்கு உபதேசரஸாயனஸாரமென்று ஓர் பதில். இல்லாத ரஸாயனத்திற்கு ஸாரம்; அஸத்ஸாரம். அஸத்தான ரஸாயனத்தில் பதில்களிருப்பதாகப் பதிலுரை. 'ஸக்ரு' என்னும் பெருமாளின் ஸத்தாஸங்கல்பத்தை ருசிப்பவரன்றோ இவர். வைஷ்ணவவிஷயமான இவர் பாட்டுகளை ஸ்ரீஸுதர்சனஸூரி ஸூக்திகளைக் கொண்டு உந்மத்தகீதமென்று நிரூபித்தோம்; இவர் பதிலை அழைக்கிறோம். தோழப்பர் ஸ்ரீதேசிகனுக்கு ஸம்பாவனை செய்ததாகஇவரோலையிட்டாடம்பரம்செய்தார்;இப்பொழுது 'நானாகப்பேசவில்லை, (இல்லாத) ஓர் க்ரந்தத்திலுள்ளதை நான் பேசினேன்'என்கிறார். பிறர் பேசும் பொய்யவதூறைப் பேசுவதும் அவதூறுக் குற்றமென்பதை இவர் அறிவாராக. 'நான் ஒருகாலும்பேசேன்'என்று இப்பொழுது ஆணையிடுபவர், அதேயிடத்தில் அதேவாயால் 'ஸம்பாவனை பண்ணினது பொய்யோ' என்கிறார். இது ஸாஹஸப்ராயமன்றோ? இவர் நெஞ்சில் ஓர் பக்கத்தில் தேசிகத்வேஷம் புகைந்துகொண்டிருப்பதை இது நிச்சிதமாகக் காட்டும். துர்வாதி, துராக்ரஹங்களைத் தான் செய்யவேயில்லை யென்று பலகால் ஆணையிட்டார். இவரே செய்ததைக் காட்டும் கடிதங்களை இதுகாறும் மறுக்கத் துணியவில்லை.

மௌனம் ஸம்மதி லக்ஷணம் என்பர். உண்மைவிளக்கக்காரர் காட்டியது உண்மையே என்பதை இவர் மௌநம் ஸ்தாபிக்கும்.

(3) ப்ரதிஷ்டையின் 9, 27, 32 பாராக்களில் 'ஸமுத்ரம் ... ஸாகரரோணாவபி, தாண்டுவேன், இல்லாவிடில் முடிவேன்' என்று இவர் காட்டிய ஸங்கல்பசரீரத்தில் முதல் முதற்கொண்டே பேசப்பட்ட ஸாகரசோஷணமெனும் ஸாகர மாரணமும் ஓர் ப்ரகாரமாக அதில் கட்டாயம் சேர்ந்ததாகை யால், ஸாகரமரணத்தோடு பெருமாள் மரணத்தையும் கூட்டு வதுதான் இவர் பக்ஷத்தில் அதிகமான விசேஷம் என்று அழ காகக் காட்டப்பட்டது. செய்தமதியிலடங்கிய ஓர் ப்ரகார மான ஸாகரமரணத்தை ச்லோகத்திலுள்ள தத்வாசகசப்தங் களைக்கொண்டு கொள்ளாமலிருக்கக்கூடுமோ? அந்த சப்தங்கள் த்வாவகமாய் இருக்கையில் இவர் பெருமாள் மரணஸங்கல்பத் திற்கு இவருடைய பரமசோபநமான புத்திதானே வாசகசப் தங்களை ஸ்ருஷ்டிக்கவேணும்.

4. 'யானொட்டி' பாசுரம் தானான தன்மைப் பெருமாள் விஷயம்; ராமாவதாரவிஷயமன்று. ராமனுடைய மதிச்லோகம் த்ருஷ்டாந்தமே. தார்ஷ்டாந்திகத்தில் அத்யந்தாஸம்பாவித மும் விருத்தமும் அஸங்கதமுமான பெருமாள் மரணத்தை வ்யாக்யானத்தில் கொள்ளக்கூடுமோ?

5. அஹிததவிஸியையே பாசுரமும், ஈடும் பெருமாள் நினைப்பாகப் பேசுவதால் அஹிதநாசகமான ஸ்வமரணம் உட்புகுவது அஸாத்யம்.

6. பெருமாள் மரணம் அஸங்கதம், நிரவகாசம் என்று ப்ரதிஷ்டை அறுதியிடுகிறது. அஸங்கதத்தைப் புகுரவிட்டு அஸம்பாவிதமென்று தள்ளுவதைவிட 'ப்ரக்ஷாளநாத்தி பங்கஸ்ய' என்ற ந்யாயப்படி புகுரவிடாமலிருப்பதல்லவோ அழகு. ச்லோகத்தில் சொல்லும் 'மரணம்' அஸம்பாவிதம், நிரவகாச மென்று ருஷி ஓரடையாளத்தாலும் இங்கே ஸூசிக்கவில்லையே.

7. ஓர் ஜ்ஞானத்தில் 'முடித்தல், கடத்தல்கள்' விஷய மாகையில் க்ரமநியமமில்லையென்று காட்டியுளது. மரணப்ர ஸஞ்ஜனபூர்வகமாக தரணத்திற்கு இசைவை ஸம்பாதித்துக் கடத்தல் ஸித்திக்கும் பின் வ்ருத்தாந்தத்தை அநுஸரித்து ஸத்யஸங்கல்பனுடைய மதிப்ரகாரத்தில் க்ரமமிசைந்ததென்று கொள்ளலாம். முடித்தல் திருவுள்ளமில்லாத பூர்வபக்ஷம்; கடத் தல் ஸித்தாந்தமான மனோரதிரமான உத்தரபக்ஷம். ஈடு காட் டிய க்ரமத்திற்கு இது திருவுள்ளமென்போம். என் பெரியார் வளர்த்த கடலாயன்முடிவனு அல்லது தரணத்திற்கிசைந்து பிழைப்பனு என்பது திருவுள்ளமோடும் அர்த்தக்ரமம்.

8. பழையதோரச்சுராமாயண கோசத்தில் 'மே தரணம்' என்னும் பாடமிருப்பதை ஆதரிக்கத்தடையென்ன? அர்த்த க்ரமத்திற்குத் தக்கபடி பாடக்ரமமும் சேரும் பாடம் ஆதரிக்கத் தக்கதே. இந்தப்பாடத்தைக் கொள்ளுகிறோமென்றால் 'வாயை மூடுகிறேன்' என்று இவர் த்வஜம் பேசுகிறது. 'த'கார 'ம'காரங் கள் எளிதில் மாறலாம். ராமாயணம் ருஷிகாலத்திலெழுதப்பட வில்லை. முதல்முதலிலிருந்தே பட்டோலை செய்யப்பட்டு அவிச் சின்னஸம்ப்ரதாயமாகப் படனபாடனத்தில் வரும் ஈட்டின் ப்ரா சீனமும் ஸார்வத்ரிகமுமான பாடத்தில் பல பதங்களை நம் இஷ் டப்படி மாற்றுவதைவிட ஓர் ப[illegible]ிப்புக்காட்டும் ஓரக்ஷரபேதம் மட்டுமுள்ள மூலச்லோகபாடத்[illegible]த க்ரஹிப்பது உசிதமல்லவோ?

9. 'எம்பெருமானார் வளர்த்துவைத்த தாத்விகாத்வைத ஸித்தாந்தத்தின் நிர்வஹணதுரந்தரான தேசிகஸார்வபௌமர்' என்று ஸ்ரீதேசிகனைப் பரித்ராணம் பேசுவதை நாம் சிரஸா ச்லாகிக்கிறோம். இதுதான் எம்பெருமானார் தர்சனபரித்ராணத் தில் நோக்குடையாரின் சைலீ. ஸ்ரீலோகாசார்யர் முதலிய நம் தர்சனப்பெரியோரை நம் பத்திரிகை ஐகாந்த்யேன பூஜித்தே பேசிவருவது ஸுப்ரஸித்தம். நம் ஸ்வரூபத்தை நாமொருகாலும் காமக்ரோதாதிசோரர்கள் கொள்ளைகொண்டுபோக விடமாட் டோம். அண்ணா வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றும் தேசிகபக்தி ஏகாந்தமாகாது; லோகாந்தமும் மிச்ரமும் துரந்த முமேயாகும்.

10. ஸ்ரீ ஆசூரிஸ்வாமி அண்ணாவை ஸபைக்கு அழைக் கிறார்; இவர் வருவாரா?

11. ஸாகரசரணாகதிசப்தம் இரண்டு ஸம்ப்ரதாயரஹஸ்யங் களிலுமுண்டு. உண்மையில் சரணாகதியல்லவென்ற ஸூசனங்களு முண்டு. காயிகஅஞ்ஜலியேயொழிய அத்யவஸாயமில்லை, ப்ரதி பந்தகநிச்சயஸஹமான ஆஹார்யஜ்ஞானமாயிருக்கலாம் என்று பரித்ராணம் காட்டுகிறது. 'அஞ்ஜலி' என்றும் ஈஷத் ஸாத் ருச்யத்தை நிமித்தீகரித்து சரணாகதியென்ற ஆபாஸம் மட்டுமே யாகலாம். உண்மையான சரணாகதியென்று கொண்டு ப்ரதிஷ் டை செய்யுமாக்ஷேபங்களுக்கு உத்திதியேயில்லை. சுக்தியில் ரஜ தத்தின் தர்மங்களிருக்கவேணுமென்று நிர்ப்பந்தம் செய்வரோ? "விஷயஸ்ய ... வெண ஸாரோபாவ்யாஸ ..." என்பர் சாஸ்த்ரஜ்ஞர்.

———

184906

ஸ்ரீ:

உத்தரவாதமுள்ள
உயர்ரக வைரங்களுக்கும்
பொன்வெள்ளி நகைகளுக்கும்
ஜரிகை பட்டு வேஷ்டிகள்
சேலைகளுக்கும்

ஸ்ரீ ஆண்டாள்

ஜுவெல்லரீஸ் லிமிடெட்.

109, சைனாபஜார் ரோட்,
மதராஸ்.

Registered No. M. 3343

தேக ஆரோக்கியம் உங்களது
பிறப்பு உரிமையல்லவா?

மஹா சந்தனாதித்
தைலம்.

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும்
மூளையையும்
பலப்படுத்த
ஆயர்வேத ரத்ன
பண்டிட் டாக்டர்
என். வி. ஸ்ரீராமா
சார்லு அவர்களின்
பிரசித்தி பெற்ற
திவ்விய
ஔஷதங்களை
சாப்பிடுங்கள்

"சித்தகல்ப
மகரத்வஜம்" (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவறாது கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூரவும் குணமுடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

மதருஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,
சென்னை.

ஹெட்ஆபீஸ் 289, எஸ்பிளனேட்.	தபால்பெட்டி 151	'ரஸாயனசாலை ஸ்ரீராமபவனம்' மைலாப்பூர்.
கிளைஆபீஸ்.180, மவுண்ட்ரோட்.	மதருஸ்	போன் 3034. தந்தி 'கல்பம்'.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.